விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

இராகம் 01 | தாளம் 115 | வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 12 செவ்வாய்க்கிழமை (27.11.2012) | பக்கங்கள்: பதினாறு

டெங்கு ஒழிப்புப் பணியில் அணி திரள்வோம்

# 2009இல் பிரேரணை வந்திருந்தால் அது படுதோல்வி கண்டிருக்கும்

## இலங்கை மீதான ஐ.நா.பேரவைக் குற்றச்சாட்டுக் குறித்து சிங்களக் கடும்போக்குக் கட்சி கருத்து

(கொழும்பு)

அடுத்த வருடம் மார்ச் மாதம் ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை கொண்டுவரப்படுவது நிச்சயம் என்று கூறியிருக்கும் கடும்போக்குச் சிங்களத் தேசியவாத அமைப்பான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் இந்தப் பிரேரணை 2009ஆம் ஆண்டு பெற்ற யுத்த வெற்றியோடு கொண்டுவரப்பட்டிருந்தால் படுதோல்வி கண்டிருக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

அடுத்த வருடம் மார்ச்சில் ஐ.நா வில் இலங்கைக்கு எதிரான பிரேரணை முன்வைக்கப்பட்டு அமெரிக்கா தலைமையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படுவது நிச்சயம் என்ற தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பாக 02

## ஆஸ்பத்திரி வளாகத்திலிருந்து எலும்புக்கூடுகள் மீட்பு

(மாத்தளை)

மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் இருந்த மனித எலும்புக்கூடுகள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த வைத்தியசாலையில் புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையிலேயே இந்த எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று அல்லது நால்வரின் எழும்பு கூடுகளுக்கான எழும்புகள் இதில் 02

## குஜராத் தேர்தல் பிரசாரத்தில் இலங்கை அகதிகளின் படங்கள்

(குஜராத்)

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் இடம்பெறவுள்ள சட்டப் பேரவைத் தேர்தல் பிரசாரங்களுக்காக இலங்கை அகதிகளின் புகைப்படங்களை காங்கிரஸ் கட்சி பயன்படுத்தி வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள இந்தத் தேர்தலில், குஜராத் முதல்வர் நரேந்திர மோடியை 02

## மாகாண சபைக்குப் பதிலாக கிராம ராஜ்யங்கள் வேண்டும்

### ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர்


(கொழும்பு)

பதின்மூன்றாவது அரசியலமைப்பு இலங்கை மீது திணிக்கப்பட்ட ஒன்று. எனவே அதனைத் தொடர்ந்து வைத்திருக்காமல், மாற்று வழிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

மாகாணசபை முறையானது இந்தியாவினால் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுடன் தீவிரமாக கலந்தாலோசிக்காமல் கொண்டு வரப்பட்ட முறையாகும்.

அதனைப் புலிகளும் ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும் அதனை நடைமுறைப்படுத்துவதற்காக இந்திய அமைதி காக்கும் படையும் இலங்கைக்கு அனுப்பப்பட்டது.

இந்த நிலையில் மாகாணசபை உறுப்பினர்களுக்கு மாத்திரமே நன்மை பயக்கும 02



நெதர்லாந்து மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டு வரும் யாழ்.ஒல்லாந்தர் காலத்து கோட்டையின் படத்தினையே மேலே காண்கிறீர்கள்.

## அவுஸ்திரேலியாவில் பாலியல் குற்றச்சாட்டுக்கு உள்ளான மதகுரு இலங்கையில் தஞ்சம்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் நூற்றுக்கணக்கான பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள முன்னாள் கத்தோலிக்கப் பாதிரியார் ஒருவர் நியூசிலாந்தில் இருந்து இலங்கைக்குத் தப்பி வந்துள்ளார்.

இவர், 1970 மற்றும் 1980 காலப் பகுதிகளில் நியுசவுத்வேல்சில் தேவாலயம் நடத்தும் நிறுவனங்களின் டசின் கணக்கிலான சிறுவர்களைப் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

சிறுவர்களைப் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டில், நியூசிலாந்துச் சிறையில் இரண்டு ஆண்டுகள் கழித்த முன்னாள் 02

## சிறைகளில் பாதாளக் குழுவினர்; ஆயுதங்களை மீளப்பெற வேண்டாம்

### சிறைக்காவலர்கள் கோரிக்கை

(கொழும்பு)

தமக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களை மீளப் பெற்றுக்கொள்ள வேண்டாம் என சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவிடம் கோரியுள்ளனர்.

வெலிக்கடை, மகசீன் உள்ளிட்ட நாட்டின் அனைத்து சிறைச் சாலைகளிலும் 02

## சென்னையில் தரையிறங்கிய ஓமான் விமானத்தின் டயர் வெடித்தது

(சென்னை)

ஓமான் நாட்டிலிருந்து சென்னைக்கு நேற்றுக் காலை 11.45 மணியளவில் 146 பயணிகள், 9 சிப்பந்திகளுடன் விமானமொன்று தரை இறங்கி ஓடுபாதையில் ஓடிய போது முன்பக்க டயர் திடீரென வெடித்தது. இதனால் விமானம் குலுங்கியது.

பயணிகள் அதிர்ச்சியில் கூச்சலிட்டனர். விமானி சாமர்த்தியமாக ஓடுபாதையில் சரியான இடத்தில் விமானத்தை நிறுத்தியதால், பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. 02

## டுபாயில் இலஞ்சம் கொடுக்க முயன்ற இலங்கைத் தம்பதியர் கைது

(கொழும்பு)

டுபாய் சர்வதேச விமான நிலையத்தில் குடிவரவு அதிகாரி ஒருவருக்கு இலஞ்சம் கொடுக்க முயன்ற இலங்கை தம்பதியினரை அந்த நாட்டுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நாட்டை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டிருந்த தங்களை அந்த நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கக் கோரியே இந்தத் தம்பதியினர் குடிவரவு அதிகாரிக்கு 10,000 டினார் பணத்தை இலஞ்சமாக கொடுக்க முற்பட்டதாகக் 02

## 14,15ஆம் திகதிகளில் காரோட்டப் பந்தயம்

(கொழும்பு)

கொழும்பில் இரவுநேர கார் ஓட்டப் போட்டிகள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 14ஆம் 15ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இதற்காகப் பழைய நாடாளுமன்றத்துக்கு அருகிலுள்ள காலி முகத்திடல் வீதியின் ஒழுங்கை ஒன்றுக்கு கார்ப்பட் 02

# அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படலாமென ஊகங்கள்

இலங்கை அமைச்சரவை மீள மைப்பு செய்யப்பட உள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த மீளமைப்பு பெரும்பாலும் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் இடம்பெற வாய்ப்புள்ளதாக அந்தத் தகவல்கள் தெரி விக்கின்றன.

கல்வி, மின்சக்தி, வெளிவிவகார, கூட்டுறவு மற்றும் உள்நாட்டு விவகாரதுறை உள்ளிட்ட அமைச்சுக்கள் சிலவற்றில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. பிரதமர் டி எம் ஜயரட்ண சுகவீனம் காரணமாக அமெரிக்க மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவரின் சுகநலத்தை கேட்டறிவதற்காக, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அண்மையில் அமெரிக்கா சென்றிருந்தார். எவ்வாறாயினும் வரவு செலவு திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான விவாதங்கள் நிறை வடையும் வரையில் அமைச்சரவை மீளமைப்பு செய்யப்படமாட்டாது என்று தெரிவிக்கப்படுகின்றன.

# மட்டக்களப்பு மேய்ச்சல் தரை இன முறுகலுக்கு வழிவிடுகிறது

மட்டக்களப்பு மாவட்ட கால்நடைப் பண்ணையாளர்களின் கால்நடைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மேய்ச்சல் தரைக் காணிகளில் அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த பெரும்பான்மை இன விவசாயிகள் அத்துமீறிப் பயிர்ச்செய்கையில் தொடர்ந்தும் ஈடுபடுவதை அனுமதிக்க வேண்டாம் என்று கிழக்கு மாகாண முன்னாள் முதமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களை கேட்டுள்ளார்.

மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டங்களின் எல்லைப் பிரதேசத்திலே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மேய்ச்சல் தரைக்கான காணி பல வருடங்கள் கடந்தும் இதுவரை வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப் படவில்லை.

மட்டக்களப்பு மாவட்ட கால்நடை பண்ணையாளர்களுக்கு 20 மைல்களுக்கு அப்பாலும் அம்பாறை மாவட்ட தெகியத்தகண்டிய பிரதேச சிங்கள விவசாயிகளுக்கு 2-3 மைல்கள் தூரத்திலும் இந்த காணி இருப்பதே இந்த பிரச்சினைக்கு காரணம் என்றும் சிவநேசதுரை சந்திரகாந்தன் கூறினார்.

பயிர்செய்கையாளர்களுக்கும் கால்நடைப் பண்ணையாளர்களுக்கும் இடையில் பிரச்சினைகள் ஏற்படுவதை தடுப்பதற்காக இருதரப்பையும் உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்ப்டடுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# வீதிக்கு தமிழ்ச் சங்கத்தின் பெயர் சூட்டும் வைபவம் ஒத்திவைப்பு

கொழும்பு வெள்ளவத்தை 57 ஆவது ஒழுங்கையின் பெயரை "கொழும்பு தமிழ்ச் சங்க ஒழுங்கை" எனப் பெயர் சூட்டும் வைபவம் நேற்றுமுன்தினம் திடீரென ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பாக பாராளுமன்றப் பேரவை உறுப்பினர் ஏ. எச். எம். அஸ்வர் எம். பீ. மேல் மாகாண ஆளுநர் எஸ். அலவி மௌலானா, மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகியோரிடம் பிரஸ்தாபித்துள்ளார். தமது கடுமையான ஆட்சேபனையையும் தெரிவித்துள்ளார்.

சுமார் 70 வருடங்களாகப் பயன்பாட்டில் இருந்து வந்த வெள்ளவத்தை ருத்ரா மாவத்தைக்கு கொழும்பு தமிழ்ச் சங்க ஒழுங்கை "எனும் புதிய பெயரை சூட்டுவதற்கான வைபவம்" நேற்றுமுன்தினம் (25/11) நடைபெற ஏற்பாடாகியிருந்தது. இறுதி நேரத்தில் இந்தப் புதிய பெயர் சூட்டும் நிகழ்வுக்கு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டு வைபவமும் ஒத்தி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அவுஸ்திரேலியாவில் பாலியல்...(தொடர்)

பாதிரியார் பேனாட் கெவின் மக்கிராத் மீது, நியூகாசில் நீதிமன்றத்தில் 252 குற்றச்சாட்டுகள் உள்ளன.

நியூசவுத்வேல்ஸ் அவரை அவுஸ்ரேலியாவுக்கு நாடுகடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வந்த நிலையில், நியூசிலாந்திலிருந்து வெளியேறிய அவர் இலங்கையில் உள்ள தோட்டப்பகுதிகளில் தஞ்சடைந்துள்ளதாக நம்பப்படுகிறது. ஒரு குற்றவாளி அய்ல் நாட்டில் சரணடைவதற்கு அவுஸ்திரேலியா விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சிறைகளில் பாதாள...(தொடர்)

கடமையாற்றிய உத்தியோகத்தர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன. இந்த ஆயுதங்களைப் பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைத்தால், பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படும் என சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறைச்சாலைகளில் புலி உறுப்பினர்கள் மற்றும் பாதாள உலகக் குழுத் தலைவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஏதேனும் கலக நிலைமைகளின்போது அதனைக் கட்டுப்படுத்த ஆயுதங்கள் மிகவும் அவசியமானது என்று சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஆயுதங்களை வழங்குவது பொருத்தமற்றது என பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குறிப்பாக ரி56 ரக துப்பாக்கிகளைப் பயன்படுத்துவது தொடர்பில் போதியளவு அனுபம் இருக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 2009இல் பிரேரணை...(தொடர்)

தேசப்பற் றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் வச ந்த பண்டார மேலும் தெரிவிக்கையில், இலங்கைக்கு எதிராக ஐ.நா தயாரித்த திரைப்படத்தின் மூன்றாவதும் இறுதியுமான பாகத் தையே ஐ.நா செயலாளர் நாய கம் பான் கீ மூன் தற்போது திரையிட்டுள்ளார்.

2009ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் எமக்கெதிராக பிரேரணை கொண்டு வந்திருந்தால் அன்றைய யுத்த வெற்றியுடன் அது தோல்வி கண்டிருக்கும். அத்தோடு வெளிநாட்டுத் தலையீட்டுடன் இலங்கையில் விசாரணைகளை மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியிருக்கும். எனவே ஐ.நா, அமெரிக்கா, இந்தியா ஆகிய மூன்று நாடுகளும் இணைந்து திரைப்படத்தை தயாரித்து இரண்டாம் முறை எமக்கெதிராக பிரேரணையை கொண்டுவந்து நிறைவேற்றியது.

பின்னர் ஹெஹனி மெகாலி குழு இலங்கை வந்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது. எதிர்வரும் மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் எமக்கெதிராகவே அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

அத்தோடு தற்போது ஐ.நா மீது குற்றஞ்சாட்டி சார்ள்ஸ் பெற்றி அறிக்கை சமர்ப்பித்துள்ளார். இது தான் திரைப்படத்தின் மூன்றாவதும் இறுதியுமான பாகமாகும். அத்துடன் இவ்வறிக்கை தருஷ்மன் அறிக்கையை நியாயப்படுத்தியுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐநா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சீனா, ரஷ்யா, கியூபா என எமக்கு ஆதரவான நாடுகள் அங்கத்துவத்திலிருந்து வெளியேறுகின்றன. அமெரிக்காவுக்கு ஆதரவான நாடுகளே இக் கூட்டத்தில் பங்கு கொள்ளும்.

இதன்போது எமக்கெதிரான பிரேரணையை நிறைவேற்றி சார்ள்ஸ் பெற்றியின் ஐ.நா.வுக்கு எதிரான விடயத்தை சுட்டிக்காட்டி ஐ.நா.வின் அனுமதியுடன் எமக்கெதிரான விசாரணைகள் அமெரிக்கா தலைமையில் ஆரம்பிக்கப்படுவது நிச்சயம்.

எனவே இவ்வறிக்கையை அரசாங்கம் நிராகரிக்க வேண்டும். அத்துடன் இதற்கெதிராக நாட்டிற்குள் மாபெரும் எதிர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# நாகபட்டனம் கடற்கரையில் கரையொதுங்கிய படகில் மர்ம மனிதன்

நாகப்பட்டனம் கடற்கரையில் ஒரு மர்மமான விசைப்படகு கரை தட்டி நின்றுள்ளது. அதில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் இருந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் அவர்கள் அனைவரும் மாயமாகி விட்டனர். அவர்கள் யார் என்பது தெரியவில்லை. அவர்களைப் பிடிக்க பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நாகபட்டினம் கீச்சாங்குப்பம் பகுதிக் கடற்கரையில் படகு கரை ஒதுங்கியிருப்பதாக வந்த தகவலைத் தொடர்ந்து பொலிஸார் விரைந்து சென்ற படகை மீட்டனர். அந்தப் படகை சோதனை போட்டபோது, படகின் பதிவு எண் அழிக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. மேலும் கடற்கரையில் ஏராளமான பைகள் கிடந்தன. அதில் பிஸ்கட் பாக்கெட்கள், குழந்தைகளுக்கான பவுடர், மருந்து போத்தல்கள், துணிகள் இருந்தன.படகில் வந்தவர்கள் இலங்கைத் தமிழ் அகதிகளாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

# இலங்கை அகதிகள் முகாம் காதல் ஜோடி பொலிசில் தஞ்சம்

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவிலில் இலங்கை அகதிகள் முகாம் செயற்பட்டு வருகிறது. இதில் 74 குடும்பங்களைச் சேர்ந்த 240 பேர் வசித்து வருகின்றனர். முகாமைச் சேர்ந்த சுகில்ராஜ் மகன் சரண்ராஜ் (எ) சுமன் (23) முகாமில் வசிக்கும் சுஜாதா (21) என்ற பெண்ணை கடந்த இரண்டு ஆண்டுகளாகக் காதலித்து வந்தார். இந்தக் காதல் விவகாரம் சுஜாதாவின் பெற்றோருக்கு தெரியவந்ததால், சுஜாதாவை சிவகங்கை பகுதிக்கு அழைத்து சென்றனர். அங்கு வேறொருவருடன் திருமண ஏற்பாடுகள் நடைபெறுவதை அறிந்த சுஜாதா ஒரு வாரத்துக்கு முன்பு தப்பிவந்தார்.

தகவல் அறிந்த காதலன் சுமன், காதலியை அழைத்துக்கொண்டு வெளி மாநிலத்துக்குச் சென்று விட்டார். சிவகங்கையில் இருந்து சுஜாதாவின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் காட்டுமன்னார் கோவில் முகாம் மற்றும் உறவினர் வீடுகளில் தேடினர். ஆனால் கிடைக்கவில்லை. இந்நிலையில் நேற்று முன்தினம் காதலர்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டனர். 2 குடும்பத்தாரின் பெற்றோர்களை மீறி திருமணம் செய்து கொண்டதால் தங்களின் உயிருக்கு பாதுகாப்பு வேண்டி நேற்றுக் காட்டுமன்னார்கோவில் பொலிசில் தஞ்சம் அடைந்தனர்.

## குஜராத் தேர்தல்...(தொடர்)

எவ்வாறேனும் தோல்வியடையச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்திலேயே இலங்கை அகதிகளின் புகைப்படங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாக அச்செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

காங்கிரஸ் கட்சியினால் பயன்படுத்தப்பட்ட மேற்படி புகைப்படங்கள், ஐக்கிய நாடுகள் சபையின் யுனிசெப் அமைப்பின் புகைப்படப்பிடிப்பாளர் ஒருவரினால் இலங்கை அகதி முகாமில் எடுக்கப்பட்ட புகைப் படங்கள் என நரேந்திர மோடியின் குழுவொன்று கண்டுபிடித்து அறிவித்துள்ளது.

இந்த சம்பவத்தை அடுத்து சமூக வலைதளங்களில் பரவலாக விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன என்றும் அச்செய்திகள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளன.

## டுபாயில் இலஞ்சம்...(தொடர்)

கூறப்படுகின்றது.

இந்தப் பெண் 1996ஆம் ஆண்டு டுபாய்க்கு பணிப்பெண் விஸாவில் வந்ததாகவும் பின்னர் தனது வேலை கொள்வோரிடமிருந்து தப்பியோடியதாகவும் அவர் ஒத்துக்கொண்டார்.

இந்த நிலையில் போலி ஆவணங்களைப் பயன்படுத்தியமை, அறிவித்தலின்றி வேலையை விட்டுத் தப்பியோடியமை ஆகிய குற்றங்களுக்காக இரண்டு மாதச் சிறை அனுபவித்த பின்னர் அவர் 2000ஆம் ஆண்டு நாடு கடத்தப்பட்டார்.

சில காலம் இலங்கையில் தங்கியிருந்த அவர் தனது கணவரின் அனுசரணையுடன் போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி 2008 ஆம் ஆண்டு மீண்டும் டுபாய்க்குச் சென்றிருந்த வேளையிலேயே அவரைக் கைதுசெய்த அந்த நாட்டுப் பொலிஸார், நாட்டை விட்டு வெளியேறுவதற்கு அவருக்குத் தடைவிதித்துள்ளனர்.

## 14,15 ஆம் திகதிகளில்...(தொடர்)

இடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இதனால் இந்த வீதி மூடப்பட்டுள்ள நிலையில் கொழும்பு கோட்டையிலிருந்து புறக்கோட்டைவரை நேற்று பாரிய வாகன நெரிசல் காணப்பட்டது.

## சென்னையில்...(தொடர்)

உடனடியாக தீயணைப்புப் படை வீரர்கள், விமான நிலைய அதிகாரிகள் விரைந்து வந்து 155 பேரையும் பத்திரமாக மீட்டு அழைத்து சென்றனர்.

இந்தச் சம்பவத்தால் மதியம் 12-30 மணிக்கு ஓமான் நாட்டுக்குத் திரும்ப வேண்டிய அந்த விமானம் தாமதமாக இரவு 11 மணிக்குப் புறப்பட்டுச் சென்றது.

## ஆஸ்பத்திரி வளாகாத்தில்...(தொடர்)

காணப்பட்டதாகவும் சம்பவத்தை அடுத்து கட்டிட நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## மாகாண சபைகளுக்கு...(தொடர்)

இந்த மாகாணசபைத் திட்டத்தை ஒழிக்கவேண்டும். அதற்குப் பதிலாக கிராம சபை அல்லது கிராம ராஜ்ஜியம் என்ற முறையை அறிமுகப்படுத்தலாம்.

இதன் மூலம் சமூகங்கள், நாட்டுக்கு எவ்வித பாதிப்புமின்றித் தாமே தீர்மானங்களை மேற்கொள்ள முடியும் என்றும் சோபித தேரர் குறிப்பிட்டுள்ளார்.

# போலி நகைகளை வங்கியில் அடகு வைத்தவர் வடமராட்சியில் கைது

தங்கம் எனக் கூறி போலி நகைகளை வங்கிகளில் அடகு வைத்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த காலங்களில் நெல்லியடியைச் சேர்ந்த ஒருவர் தங்கம் எனக் கூறி போலி நகைகளை 4 வங்கிகளில் 4 தடவைகள் அடகு வைத்து பணத்தைப் பெற்றிருந்தார்.

குறித்த நபர் 2010 ஆண்டு காலப்பகுதியிலேயே இவ்வாறு போலி நகைகளை அடகு வைத்து பணத்தைப் பெற்றிருந்தார். அது குறித்து தகவல் வங்களின் ஊடாக நெல்லியடிப் பொலிஸாருக்கு வழங்கப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கும் தொடுக்கப்பட்டது.

ஆனாலும் அவர் விசாரணைக்காக நீதிமன்றத்தில் சமுகமளிக்காத காரணத்தினால் அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி குறித்த நபரை நெல்லியடி பொலிஸார் கடந்த 15 ஆம் திகதி கைது செய்துள்ளனர்.

அதனையடுத்து மேற்கொண்ட விசாரணையில் 2 பாரிய குற்றங்களைச் செய்துள்ளதற்கான தகவல்களும் அடகு வைத்ததற்கான பற்றுச்சீட்டும் அவரிடம் இருந்தது கைப்பற்றப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவர் தொடர்பில் புலனாய்வு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நெல்லியடிப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# 60 இலங்கையர்கள், சவுதியில் இருந்து நாடு கடத்தப்பட்டனர்

சவூதி அரேபியாவில் பல குற்றச்செயல்களில் ஈடுபட்ட 60 இலங்கையர்கள் நேற்றுமுன்தினம் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

சவூதியில் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுச் சென்று அங்கு பல்வேறு குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டு கைதாகியுள்ளனர். பின்னர் குற்றச்செயல்களுக்காக ஜெத்தா சிறைச்சாலையில் ஒரு வருடத்திற்குட்பட்ட சிறைத்தண்டனை அனுபவித்துள்ளனர்.

தண்டனை முடிவடைந்த பின்னரே இவர்கள் அனைவரும் நாடு கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு, பதுளை, அம்பாறை, அநுராதபுரம், குருநாகல் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே குற்றச்செயல் காரணமாக நாடு கடத்தப்பட்டவர்களாவர்.

# புதையல் தோண்டிய ஏழு பேர் கைது

திருக்கோவில், சாகாமம் - ஊரக்கை எனும் இனங்காணப்பட்ட தொல்பொருள் பிரதேசத்தில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஏழு பேர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது, புதையல் தோண்டும் நடவடிக்கைக்குப் பயன்படுத்திய கௌண்டி கனரக வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது.

அம்பாறை புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து, அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரைக்கு அமைவாக அக்கரைப்பற்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த ரத்நாயக்கா தலைமையிலான அம்பாறை புராதன விஞ்ஞான பகுப்பாய்வுப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் உபூல் மற்றும் அக்கரைப்பற்று, திருக்கோவில் பிரதேச பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான மேலதிக விசாரனைகளை அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான் பொலிஸ் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் திருக்கோவில் பிரதேசத்தை சேர்ந்தவர்கர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## இரு நீர் தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு

காசல்ரீ மற்றும் விமலசுரேந்திர நீர்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் பிற்பகல் முதல் மலையகத்தில் பெய்த அதிகளவான மழை காரணமாக மேற்படி நீர்த்தேக்கங்களின் நீர்மட்டங்கள் அதிகரித்துள்ளன. இதனால், அவற்றின் வான்கவுகள் திறக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

மேலும் நீரை வெளியேற்றும் கதவுகள் திறக்கப்பட்டதனால் களனி ஆற்றின் நீர் மட்டம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதாகவும் அதனால் ஆற்றை பயன்படுத்துபவர்கள் மிக அவதானத்துடன் செயற்படுமாறும் நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் வேண்டுக்கோள் விடுத்துள்ளார்.

## 5 குடும்பங்கள் இலங்கை வந்தன

இலங்கையைச் சேர்ந்த ஐந்து குடும்பங்களை அவுஸ்திரேலிய அரசானது நாடுதிருப்பியுள்ளது. இவர்களுள் 4 சிறுவர்கள் உட்பட 27 பேர் கிரீஸ்மஸ் தீவில் இருந்து கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டதாக அவுஸ்திரேலியா குடியகல்வு மற்றும் பிரஜா உரிமை அமைச்சர் அழுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது. இந்த வருடம் ஆகஸ்ட் 13 ஆம் திகதி தொடக்கம் பலவந்தமாக அவுஸ்திரேலியில் இருந்து இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை 493 ஆகும்.

# இந்திய எல்லைக்குள் நுழைந்த பத்து இலங்கை மீனவர்கள் கைது

இந்திய எல்லைக்குள் அனுமதியின்றி நுழைந்த இலங்கை மீன்வர்கள் 10 பேர் இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆந்திர மாநிலம் கிழக்கு கோதாவரி மாவட்டம் கிருஷ்ணப்பட்டனம் கடற்கரையில் ரோந்து சென்ற கடற்படை பொலிஸார் அவர்களைக் நேற்று கைது செய்துள்ளனர்.

வங்கக் கடலில் வழக்கமான ரோந்து சோதனையின் போது இவர்கள் பிடிபட்டதாக இந்திய கடற்படை பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடற்படை பொலிஸார், பின்னர் இவர்களை காக்கிநாடா கடற்புற பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அவர்களிடம் இருந்து இரண்டு படகுகள், 1800 கிலோ சூரை மீன்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# அரச மொழிக் கொள்கையை மீறினால் வழக்குத் தாக்கல்

அரசகரும மொழிக் கொள்கையை உரியமுறையில் கடைப்பிடிக்காத அரச நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக அரசகரும மொழிகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அரசகரும மொழிக்கொள்கையை மீறியுள்ள 75 அரச நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், ஏனைய அரச நிறுவனங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டி வருவதாகவும் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஆர் ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசியல் ரீதியாக செல்வாக்கு மிக்க அமைச்சுகளுக்கு, குறிப்பாக ஜனாதிபதிக்கு உட்பட்ட அமைச்சுகளின் அரச நிறுவனங்களுக்கு எதிராக இந்த விவகாரத்தில் சட்ட நடவடிக்கை எடுப்பது என்பது நடைமுறையில் கேள்விக்குறியே என்று அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினரும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மூத்த விரிவுரையாளருமான என்.பி.எம். சைஃப்டீன் தெரிவித்தார்.

அரசகரும மொழிக்கொள்கையை மீறும் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு எதிராக நீதவான் நீதிமன்றம் ஊடாக சட்டநடவடிக்கை எடுக்கமுடியும் என்கின்ற அதிகாரம் ஆணைக்குழுவுக்கு இருக்கின்ற போதிலும்,

2010ஆம் ஆண்டுவரையான தனது 10 ஆண்டு கால பதவிக்காலத்தில் தமக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகள் குறித்து எந்தவொரு வழக்கும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# செல்லிடத் தொலைபேசி விபரப்பட்டியல் விரைவில்

இலங்கையில் முதன் முறையாக செல்லிடப்பேசி விபரப்பட்டியலொன்று வெளியிடப்பட உள்ளது. ஏனைய தொலைபேசி விபரப் பட்டியலைப் போன்றே சகல விடயங்களும் இந்த செல்லிடப்பேசி விபரப் பட்டியலிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அன்ட்ரய்ட் செல்லிடப் பேசிப் பாவனையாளர்கள் இந்த புதிய திட்டத்தின் மூலம் நன்மை அடைவார்கள் என தெரிவிக்கப்படுகிறது. அன்ட்ரய்ட் செல்லிடப் பேசி பயன்பாட்டாளர்களுக்கென விசேட மென்பொருளொன்று உருவாக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. இந்த மென்பொருளைப் பயன்படுத்தி செல்லிடப் பேசி விபரப் பட்டியலை பார்வையிட முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இ.போ.ச.தனியார் பஸ்கள் ஒரே நேரசூசியின் கீழ்

இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்கள் அனைத்தும் ஒரே நேர அட்டவணையின் கீழ் இயக்கப்படும் என்று தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் சீ.பி.ரத்நாயக்க தெரிவித்தார்.


எதிர்வரும் 2013ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இவ்வாறு இயங்கவுள்ளதாக அமைச்சர் நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

# பூனையாக இருந்த விமலின் இன்றைய வீரத்தனம் நகைச்சுவையானது

## உதித் அநுராத தெரிவிப்பு

மாகாணசபை முறைமையைக் கொண்டுவருவதற்காக இந்திய அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும்போது பூனையைப் போன்று இருந்த விமல் வீரவன்ச, இன்று ஒரு வீரரைப் போல் மாகாணசபை வேண்டாம் என்று கூச்சலிடுவது நகைச்சுவையாக உள்ளது என்று ஆளுங்கட்சியின் மத்திய மாகாணசபை உறுப்பினர் உதித் அநுராத தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியைக் காட்டிக்கொடுத்துவிட்டு புதிய கட்சியொன்றை ஆரம்பித்துக்கொண்ட விமல் வீரவன்ச, ஜனாதிபதியின் ஆசிர்வாதத்தில் அமைச்சுப் பொறுப்பைப் பெற்றுக்கொண்டுவிட்டு இப்போது மாகாண சபை வேண்டாம் என்று கூறுவது வெட்கமற்ற தனத்தைக் காண்பிக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



தம்புள்ளை, கலோக ஹஎல பகுதியில் இடம் பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மாகாண சபை உறுப்பினர் உதித் அநுராத மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## இன்றைய இராசி பலன் (27.11.2012)

நந்தன வருடம் கார்த்திகைத் திங்கள் 12ஆம் நாள்
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம் : பரணி பி.ப 12.58 வரை அதன் பின் கார்த்திகை
திதி : சதுர்த்தசி மாலை 6.22 வரை அதன் பின் பூரணை
சுபநேரம் : 10.43 - 12.13 இராகுகாலம் : 3.13 - 4.43
(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)

மேடம் : சுபகாரியம், குடும்ப மகிழ்ச்சி, பெற்றோருக்கு உதவுதல்
இடபம் : வீண்செலவு, தொழில் விடயத்தில் கவனம், பொறுமை தேவை
மிதுனம் : சுபகாரியச் செலவு, மனநிம்மதிக் குறைவு, தேவையற்ற தலையீடு
கடகம் : காரியத் தடை, பெண்களால் நன்மை, முயற்சின் மேல்பலன்
சிங்கம் : மனநிலை குழப்பம், முற்கோபம், தவறனா முடிவு
கன்னி : பொருளாதாரக் கட்டுப்பாட்டு, மருத்துவச் செலவு, திருப்தியற்ற மனநிலை
துலாம் : கடினமுயற்சி, தொழில் தாமதம், மேலதிகாரிகளுடன் பிரச்சினை
விருச்சிகம் : முயற்சி தாமதம், எதிர்பார்ப்புத் தடை, மனவியால் சஞ்சலம்
தனுசு : மனக்கவலை, வீண் அலைச்சல், உற்சாகக் குறைவு
மகரம் : காரிய சித்தி, நம்பிக்கை அதிகரிப்பு, தொழில் உற்சாகம்
கும்பம் : பொருள் வரவு, தேகஆரோக்கியம், இடமாற்றம்
மீனம் : தொழில் முன்னேற்றம், அந்நியர் உதவி, கடன் சுமை குறையும்

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# த.தே.கூ.க்கு அமெரிக்காவின் அழைப்பு ஓர் அரசியல் காய் நகர்த்தலாகும்

## - அமைச்சர் வாசுதேவ நாணயக்கார

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான அமெரிக்காவின் அழைப்பு இலங்கைக்கு எதிரான அரசியல் காய் நகர்த்தல் ஆகும் என அமைச்சர் வாசுதேவ நாயக்காரா தெரிவித்தார். அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் தேசிய மொழிகள் மற்றும் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கம் தொடர்பான அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளவை யாதெனில்,

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு உலகில், வேறு நாடுகள் தொடர்பில் அந்நாட்டுச் சட்டங்களுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் விமர்சனங்களை முன்வைப்பதற்கும் உரிமையுண்டு. அதனை நாம் தடுக்க முடியாது.

அத்தோடு எந்தெந்த நாடுகளுடன் நட்புறவை பேணுவது, எந்தெந்த நாடுகளுடன் எதிரான போக்கை கடைப்பிடிப்பது என்பது தொடர்பிலும் முடிவெடுப்பது அமெரிக்காவின் உரிமையாகும்.

எனவே, இலங்கை பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி ஒபாமா தலைமையில் குழு அமைக்கப்படுவது அந்நாட்டுக்குள்ள உரிமை. இதனை எமது நாட்டுப் பிரச்சினையில் தலையிடும் நடவடிக்கையாக நான் கருதவில்லை.

அதேபோன்று அமெரிக்காவின் ஆதரவுடன் பலஸ்தீன மக்கள் கொல்லப்படுவது ஈராக், ஆப்கானிஸ்தானில் மக்களை கொலை செய்வது உட்பட அமெரிக்காவின் மனித உரிமை மீறல்களை விமர்சிக்கும் அவற்றுக்காக எதிர்ப்பை வெளியிடும் உரிமையும் இலங்கை அரசாங்கத்திற்கு உள்ளது. இதனைத் தடுக்கவோ, எதிர்க்கவோ அமெரிக்காவுக்கு அதிகாரம் இல்லை.

இலங்கை அரசாங்கத்தை அமெரிக்காவிற்கு தேவையான விதத்தில் ஆட்டுவிக்க முடியாமையால் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான செயற்பாடுகளை அமெரிக்கா முன்னெடுக்கின்றது.

அமெரிக்கா ஜனாதிபதி பராக் ஒபாமா தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு அழைப்பு விடுத்தமை சம்பந்தனுக்கு மகிழ்ச்சியை கொடுத்திருக்கும். ஏனெனில் அமெரிக்காவின் அழைப்பு அவருக்கு கிடைத்த கௌரவமாகும். ஆனால் இலங்கை அரசாங்கத்தை பொறுத்தவரையில் இவ் அழைப்பானது இலங்கைக்கு எதிரான அரசியல் காய் நகர்த்தலுக்கான அழைப்பாகும்.

13ஆவது திருத்தத்தை முழுமையாக பயன்படுத்தி அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கலை தமிழ் மக்களுக்கு வழங்கவேண்டும். இதனை நாம் ஆதரிக்கின்றோம், அதேபோன்று அரசுக்குள் உள்ள பலர் ஆதரிக்கின்றனர். இவ் ஆதரவு அதிகரிக்கப்படவேண்டும். அப்போதுதான் அது நிறைவேறும்.

அதேவேளை அரசிற்குள் சிலர் இதனை எதிர்க்கின்றனர். இது தொடர்பாக அவர்கள் சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு சென்ற பிரசாரம் எடுபடவில்லை.

இவ்வாறானவர்கள் தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களை தெரிவிக்கின்றனர். இந்நிலையானது பிரச்சினையை தீர்ப்பதற்கான காலத்தை இழுத்தடிக்கின்றது என வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

## வடக்கில் அணுக் கதிர்வீச்சு பாதுகாப்பு கட்டமைப்புகள் உருவாக்கம்

வட மாகாணத்தில் அணுக் கதிர்வீச்சு பாதுகாப்பு கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அணு உலைகளின் கதிர் வீச்சுக்களினால் இலங்கைக்கு ஏற்படக் கூடிய சுற்றாடல் அனர்த்தங்களை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் நோக்கில் வட மாகாணத்தின் நான்கு இடங்களில் இந்த கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட உள்ளன.

கல்பிட்டி, தலைமன்னார், நெடுந்தீவு மற்றும் காங்கேசன்துறை ஆகிய பிரதேசங்களில் முதல் கட்டமாக இந்த கட்டமைப்புக்கள் அமைக்கப்பட உள்ளன.

இரண்டாம் கட்டத்தில் கொழும்பு, திருகோணமலை, காலி, கண்டி போன்ற இடங்களில் மேலும் இவ்வாறான கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட உள்ளன. அணுக் கதிர்வீச்சு தாக்கங்களை கண்டறியும் வகையிலான கருவிகள் ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கு எதிராக வழக்கு தொடரப்படுமாம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக வழக்குத் தொடர அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்திற்கும் இராணுவத்தினருக்கும் அவதூறு ஏற்படும் வகையில் பிரசாரம் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அண்மையில் கிளிநொச்சியில் இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட 109 தமிழ் பெண்களில் மூவரை படையினர் பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக பிரசாரம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு போலியான பிரசாரத்தில் ஈடுபட்டு படையினருக்கு களங்கம் ஏற்படுத்தி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பி.பி.ஸி மற்றும் தமிழ்வின் ஆகிய ஊடகங்களுக்கு குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு போலியான தகவலை வழங்கியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த போலியான பிரசாரத்தினால் இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச அரங்கில் களங்கம் ஏற்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## மாவடி வீதி புனரமைப்பு

(மீரான்)

யாழ்ப்பாணம் ஐந்து சந்தி- மாவடி வீதி புனரமைப்பு மேற்கொள்ளப்படுகின்றது. கடந்த வாரம் யாழ். மாநகரசபை உறுப்பினர்களான பீ.எஸ்.எம்.சுபியான், சரபுல் சுனாம், முதல்வரின் செயலாளர் மற்றும் மாநகரசபை உத்தியோகத்தர்கள் 'தார்' ஊற்றி ஆரம்பித்து வைத்தார்கள்.

"நெல் சிப்" திட்டத்தின் பிரகாரம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மேற்பார்வையில் மாவடி வீதி, வைரவர் கோயில் வீதி, காமால் வீதிகள் செப்பனிடப்படுகின்றன. நீண்ட காலமாக இவ் வீதிகள் குன்றும் குழியுமாகக் காட்சியளித்திருந்தன. இதனால் இவ் வீதியால் துவிச்சக்கரவண்டி, முச்சக்கர வண்டியில் செல்லமுடியாத நிலை காணப்பட்டன.

## சிவில் பாதுகாப்புக் கமிட்டி பொதுமக்கள் கலந்துரையாடல்

(மீரான்)

யாழ்ப்பாணம் J/87 கிராம அலுவலர் சிவில் பாதுகாப்பு கமிட்டி தலைவர் எம்.நவ்சாத் தலைமையில் பொதுமக்களுக்கான கூட்டம் நடைபெற்றன.

இக்கூட்டத்தில் J/87 கிராம அலுவலர் எம்.எஸ்.ஜினூஸ், சன சமூக நிலைய தலவர் எம்.ஹஸ்ஸான், அபுபக்கர் பள்ளி தலைவர் மற்றும் சிவில் பாதுகாப்பு குழுவின் பொலிஸ் அதிகாரிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டார்கள்.

கிராமங்களில் கால் நடைகள் அதிகளவு களவு போவதாகவும் குறிப்பாக ஆடுகள் மிக இலகுவான முறையில் களவாடப்படுவதாகவும் சிவில் பாதுகாப்பு குழுவிற்கு முறைப்பாடுகள் வந்துள்ளன.

கால்நடைகளின் களவுகளை கட்டுப்படுத்துவதற்காகவும், களவை மேற்கொள்பவர்களை இனம் காட்டுவதற்காகவும், கள்வர்களுக்குரிய தண்டனையை பெற்றுக்கொடுப்பதற்காகவுமாக நடைபெற்ற கலந்துரையாடலில் அதிகளவு ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டனர்.

சிவில் பாதுகாப்பு கமிட்டியின் கூட்டங்களுக்கு சமுகளிக்காத அங்கத்தவர்களுடைய அறிமுக அட்டைய ரத்து செய்வது சம்பந்தமாகவும், வீதிகளில் வாகனங்களை நிரந்தரமாக நிறுத்தி வைத்திருப்பதனால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் பற்றியும் ஆராயப்பட்டன.





யாழ்ப்பாணம் J/87 கிராம அலுவலர் பிரிவில் டெங்கு ஒழிப்பு பிரசாரம் மிக தீவிரமாக நடாத்தப்பட்டது. J/87 கிராம அலுவலர் எம்.எஸ்.ஜினூஸ் தலைமையில் அராலி வீதியிலுள்ள சுகாதார நிலையத்தில் பொதுமக்களுக்கான டெங்கு ஒழிப்பு கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் சுகாதார வைத்தியப் பரிசோதகர் வசீகரன், யாழ்.மாநகரசபை உறுப்பினர் சரபுல் சுனாம், சமுர்த்தி அதிகாரி என்.ஜெகதீஸ்வரன், குடும்ப நல உத்தியோகத்தர் எம்.தேவசெல்வி உட்பட யாழ்.பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் கலந்து கொண்டார்கள்.

ஆட்கொல்லி நோயான டெங்கை ஒழிப்பதற்கு பொதுமக்களின் பங்களிப்பு தேவையென்றும் பழைய இருப்புகள், கழிவுப் பொருட்கள், இளநீர் கோம்பைகள், தயிர் சட்டிகள் உடனடியாக வீடுகளிலிருந்து வெளியேற்றும் படியும் கூறப்பட்டன.

இப்பகுதியில் உள்ள வெற்றுக்காணிகளில் உள்ள பாழடைந்த கிணறுகளையும் அதனைக் சூழவுள்ள இடமும் சுகாதாரமற்ற வகையில் உள்ளதை அதிகாரிகள் கண்கானித்து, உடனடியாக திருத்தும்படி கூறியுள்ளார்கள். தவறும் பட்சத்தில் சட்டநடவடிக்கை மேற்கொண்டு அபராதம் விதிக்கப்படுவதிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறு பொலிசார் கட்டளையிட்டார்கள். (மீரான்)

## தமிழ்க் கூட்டமைப்புடன் பேச்சு நடத்த அமெரிக்கா முடிவு

தமிழ் தேசிய கூட்டமைப்புடன் பேச்சுக்களை நடத்துவதற்கு அமெரிக்கா தீர்மானித்துள்ளது. ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அடுத்த அமர்வுக்கு முன்பதாக இந்த வருட தொடக்கத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைய இலங்கை அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாகவே கூட்டமைப்புடன் அமெரிக்கா ஆராயவுள்ளது.

2013ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ள அடுத்த அமர்வில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை இலங்கை பற்றி ஓர் அறிக்கை சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு அடுத்த வருட முற்பகுதியில் அமெரிக்காவிற்கு விஜயத்தை மேற்கொள்ளும் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அமெரிக்கா அதிகாரிகளுடனான எமது பேச்சு வார்த்தையின் ஒரு பகுதியாகவே இது அமையும் என அவர் குறிப்பிட்டார்.

# அரச கரும மொழிக் கொள்கையை மீறிய அரச நிறுவனங்கள் மீது வழக்குகள் இல்லை

## அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர்

இலங்கையில் அரச கரும மொழிக் கொள்கையை உரியமுறையில் கடைப்பிடிக்காத அரச நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக அரசகரும மொழிகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அரச கரும மொழிக் கொள்கையை மீறியுள்ள 75 அரச நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், ஏனைய அரச நிறுவனங்கள் பற்றிய தகவல்களை திரட்டி வருவதாகவும் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஆர் ரணவக்க உள்ளூர் ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அரச கரும மொழிக் கொள்கையை மீறும் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு எதிராக நீதவான் நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்கின்ற அதிகாரம் ஆணைக்குழுவுக்கு இருக்கின்ற போதிலும், 2010-ம் ஆண்டு வரையான தனது 10 ஆண்டு கால பதவிக் காலத்தில் தமக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகள் குறித்து எந்தவொரு வழக்கும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் மொழிப் பிரச்சினை என்பது 1956-ம் ஆண்டில் தனிச் சிங்கள சட்டம் கொண்டுவரப்பட்ட போது நிலவிய சூழ்நிலையிலிருந்து இன்று வரை எந்தவிதத்திலும் முன்னேற்றம் அடையவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அரசியலமைப்பில் அரச கரும மொழி சிங்களம் மட்டுமல்ல, தமிழும் என்ற அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தாலும் அதன் நடைமுறையை இன்னும் காண முடியவில்லை என்று அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் சைப்டீன் தெரிவித்தார்.

இலங்கையின் மொழிப் பிரச்சினை ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் நிலவிய சூழ்நிலையே இன்னும் நாட்டில் இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

இலங்கையில் பல அரச நிறுவனங்களில் தமிழ் அதிகாரிகள் இல்லை என்றும், தமிழ் மொழிபெயர்ப்பு தெரிந்த அதிகாரிகள் இல்லாத நிறுவனங்கள் பல இருப்பதாகவும் சைஃப்டீன் தெரிவித்தார்.

சில அரச நிறுவனங்களில் பணியாற்றும் தமிழ் அதிகாரிகளும் அரசகரும மொழிக் கொள்கை சரிவரக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதை சுட்டினால் தேவையற்ற "முத்திரைகள்" தம்மீது குத்தப்படும் என்று அஞ்சுவதாகவும் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் பி.பி.ஸி. தமிழோசையிடம் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் 1987ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பின் 13ஆம் திருத்தத்தின் அங்கமாகவே தமிழும் அரசகரும மொழி என்ற அந்தஸ்து வழங்கப்பட்டது.

அதன்படி சிங்களம், தமிழ் இரண்டும் அரச கரும மொழிகள். ஆங்கிலம் இணைப்பு மொழி என அறிவிக்கப்பட்டது.

அது அரச நிறுவனங்களில் முறையாக பின்பற்றப்படுகிறதா என்பதை மேற்பார்வை செய்வதற்காகவே அரச கரும மொழிகள் ஆணைக்குழுவும் 1991ஆம் ஆண்டு சட்டப்படி நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இரு பஸ்கள் மோதி விபத்து அறுபது பேர் காயம்

கிரிந்திவெல, தித்தபத்தர பகுதியில் இரு பஸ்கள் ஒன்றுடனொன்று மோதி விபத்திற்குள்ளானதில் சுமார் 60 பேர் காயமடைந்துள்ளனர்.

இரண்டு தனியார் நிறுவனங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்களை ஏற்றிக்கொண்டு வந்த இரண்டு பஸ்களே இவ்வாறு மோதி விபத்திற்குள்ளானதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்களில் 14பேர் கொழும்பு வைத்தியசாலையிலும், 11பேர் தொம்பே வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனையோர் ஹோமாகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை இடம்பெற்ற இவ் விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பேஸ்புக்கில் மத, இனக் காழ்ப்புணர்வுகளைப் பரப்புவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது

பேஸ்புக்கில் (முகநூல்) சமய இன காழ்ப்புணர்வைப் பரப்புவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது என்று இலங்கை கணினி அவசர நடவடிக்கை அணி தெரிவித்துள்ளது.

பேஸ்புக் பயன்பாட்டுக்கான நிபந்தனைகளின்படி இந்த விடயத்தில் நடவடிக்கை எடுப்பதை தடுத்து வருகின்றது என இலங்கை கணினி அவசர நடவடிக்கை அணியின் பேச்சாளர் ரொஷான் சந்திரகுப்தா தெரிவித்தார்.

இது பற்றி ஐக்கிய அமெரிக்காவிலுள்ள பேஸ்புக் உடன் தொடர்புகொண்டோம். பேஸ்புக் நிபந்தனைகள் கருத்து சுதந்திரத்தை பாதுகாக்கின்றன.

இதனால் இன மற்றும் மத காழ்புணர்வுகளை பரப்புவோர் மீதும் நடவடிக்கை எடுக்க முடியாது என அவர்கள் எமக்கு அறிவித் துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை கணினி அவசர நடவடிக்கை அணி நீதி அமைச்சுடன் பேச்சு நடத்தவுள்ளது எனவும் அவர் கூறினார். இதேவேளை, பேஸ்புக் தொடர்பான முறைப்பாடுகளை நாம் பொலிஸ் கணினி பிரிவுக்கு அனுப்பி வருகின்றோம் என பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜயகொடி தெரிவித்தார்.

பேஸ்புக்கை பயன்படுத்தி இன மற்றும் மத காழ்ப்புணர்ச்சிகளை பரப்பும் போக்கு இளைஞர்களிடையே பரவி வருகின்றது. பல போலி பேஸ்புக் பதிவுகள் உருவாக்கப்பட்டுள்ளது எனவும் கடவுச்சொலை திருடுதல், புகைப்படங்களை அனுப்புதல் என்பன பேஸ்புக் தொடர்பாக அதிகம் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளாகும்.

# கேகாலை டிப்போ கணக்காளர் சிறைப்பிடிப்பு



இலங்கை போக்குவரத்துச் சபையின் கேகாலை டிப்போ கணக்காளரை அந்த டிப்போவைச் சேர்ந்த ஊழியர்கள் டிப்போவில் உள்ள அறை ஒன்றில் வைத்துப் பூட்டியுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் மாதத்திலிருந்து தங்களுக்கு சம்பளம் வழங்கப்படாததைக் கண்டித்து டிப்போவைச் சேர்ந்த ஊழியர்கள் நேற்று திங்கட்கிழமை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கணக்காளரிடம் நியாயம் கேட்கச் சென்றவேளை, அவருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதனை அடுத்து ஆத்திரமடைந்த இ.போ.ச. ஊழியர்கள், இ.போ.ச. டிப்போ கணக்காளரை அறையினுள் வைத்து பூட்டியுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் மாதத்திலிருந்து இவர்களுக்கான மாதாந்த சம்பளம் இதுவரையில் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிலையில் கேகாலை இ.போ.ச. முகாமையாளர், ஊழியர்களுடனும் தொழிற்சங்க அதிகாரிகளுடனும் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கான கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

# யாழ். வைத்திசாலையில் ஆய்வுகூட இராசாயனப்பொருட்களுக்கு பற்றக்குறை

யாழ். போதானா வைத்தியசாலையின் ஆய்வுகூடத்திற்குத் தேவையான இராசாயனப் பொருட்கள் பற்றக்குறையாகக் காணப்படுவதால் ஆய்வுக்கூடப் பரிசோதனைகள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்திசாலையின் பணிப்பாளர் ஸ்ரீபவானந்தாரஜா தெரிவித்தார்.

குறித்த பொருட்கள் வழங்கும் நிறுவனத்திற்கு வைத்தியசாலை நிர்வாகம் பொருள் வழங்கலுக்கான நிதி வழங்க வேண்டியிருந்தது.

இதனால் குறித்த நிறுவனம் வைத்தியசாலைக்கு வழங்க வேண்டிய இராசயானப் பொருட்களை குறைத்துள்ளது. இதனால் பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இது குறித்து சுகாதார அமைச்சுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதோடு குறித்த நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டிய நிதி இன்னமும் வழங்கப்படவில்லை. இந்த குறித்த நிறுவனம் சில இரசாயனப் பொருட்களை வழங்கியுள்ளது.

இனிவரும் நாட்களில் குறித்த நிறுவனத்திற்குரிய கொடுப்பனவு வழங்கப்பட்ட பின்னர் சீரான முறையில் இரசாயனப் பொருட்கள் வழங்கல் இடம்பெறும் என்று நம்புவதாக அவர் தெரிவித்தார்.

# வடபகுதிக் கடலில் கடல் அட்டை பிடிப்பற்கு அனுமதி

வடபகுதி கடற்பரப்பில் கடல் அட்டை பிடிப்பற்கு க்டற்தொழில் நீரியல்வளத் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

நீண்டகாலமாக இத்தொழிலில் ஈடுபட்டு வருபவர்கள் மட்டும் கடலட்டை பிடிக்கலாம் என்று அத்திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கடலட்டை பிடிப்பு தொழிலில் ஈடுபட்டு வருபவர்கள் தங்கள் பகுதி கடற்தொழிலாளர் சங்கங்கள் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கடலட்டை பிடிக்க அனுமதிக்கப்பட்டவர்கள் கண்ணாடி மற்றும் காலணி என்பவற்றைப் பயன்படுத்தி பிடிக்க முடியும் என்றும் ஒட்சிசன் சிலிண்டர் கொண்டு பிடிப்பவர்கள் தங்களுக்கான அனுமதியினை நீரியல் வள அமைச்சின் ஊடாக பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# கிளிநொச்சியில் போரினால் பாதிக்கப்பட்ட 58 குடும்பங்களுக்கு நிதி

கனடா "வாழவைப்போம்" அமைப்பினால் கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களில், விசேடமாக தெரிவு செய்யப்பட்ட சுமார் 58 குடும்பங்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டிற்கான நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.வேளமாலிகிதன் தலைமையில் "அறிவகம்" மண்டபத்தில் நடைபெற்ற இந்த வாழ்வாதார நிதியுதவி வழங்கும் நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், முன்னாள் யாழ்.மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம், பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் செயலாளர் எஸ்.பிருந்தாபன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 58 குடும்பங்களுக்கும் தலா மூவாயிரம் ரூபா வீதம் வாழ்வாதார நிதியுதவி வழங்கப்பட்டது.

# ஜனவரியில் ஆசிரியர்களுக்கான இடமாற்றம்

இடமாற்றத்திற்கு விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கு ஜனவரி மாதம் இடமாற்றம் வழங்கப்படுமென்று வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆர்.செல்வராஜா நேற்று திங்கட்கிழமை தெரிவித்தார்.

வடமாகாணத்தில் உள்ள 12 வலயத்திலும் இருந்து 1500 ஆசிரியர்கள் இடமாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

அவர்களின் விண்ணப்பங்கள் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றன என்று கூறினார்.

பரிசீலனைகளின் பின்னர் வன்னி பாடசாலை கணக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து ஆசிரியர்கள் இடமாற்றப்படுவர்கள்.

ஐந்து வருட சேவைக்காலத்தினை பூர்த்தி செய்த ஆசிரியர்களே இடமாற்றப்படுவார்கள் என அவர் கூறினார்.

அதேவேளை, வன்னி பிரதேசத்தில் ஐந்து வருட சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டவாறு கஷ்டப் பிரதேசமாயின், ஐந்து வருடத்திற்கும், வசதியான பிரதேசமாயின், ஆறு வருடத்திற்கும் இடமாற்றப்படுவார்கள்.

ஆசிரியர்களினால் அனுப்பப்பட்ட விண்ணப்பங்களில் தகுதியில்லாதவர்களின் இடமாற்ற விண்ணப்பங்கள் நீக்கப்பட்டு தகுதியானவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுமென்று மாகாண கல்வி பணிப்பாளர் மேலும் கூறினார்.

தமிழ்நாதம்
Thamil Naatham
நவம்பர் மாதம் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

# மக்கள் மட்டுமே மாவீரர்கள் அவர்களே வீரமிக்கவர்கள்

மூன்று தசாப்தகால யுத்தம் முழு நாட்டையுமே வாட்டி வதைத்து விட்டது. சிங்களவர், தமிழர், முஸ்லிம்களென்ற பிரதான மூன்று இன மக்களுமே இந்த மோதலுக்குப் பாரிய விலை கொடுத்திருக்கிறார்கள். மோதலில் சம்பந்தப்பட்ட அரச படையினரையும், ஆயுதக் குழுவினரையும் விட அதிக விலை கொடுத்தவர்கள் அப்பாவி மக்களே. இந்த மோதலில் மூன்று தரப்பினர் சம்பந்தப்பட்டிருக்கின்றனர்.

ஒன்று ஆயுதமேந்திய போராட்ட அமைப்பு. மற்றது அரசாங்கத்தின் பாதுகாவலனாகத் திகழும் அரசு இயந்திரம். ஆயுதப் படைகள், பொலிஸ், கச்சேரி, நீதிமன்றங்கள் எல்லாம் அரசு இயந்திரமென்ற வகைக்குள் அடங்குபவை. மூன்றாவது அப்பாவி மக்கள். அப்பாவி மக்கள் என்று சொல்லும்போது சகல இனங்களையும் சேர்ந்த மக்களையே அது குறிக்கும்.

இன்னொரு வார்த்தையில் சொல்வதானால், தமக்குச் சரியானதென வரித்துக் கொண்ட இலட்சியத்தின் பேரால் ஆயுதமேந்தியவர்களும் ஆயிரக் கணக்கில் மரித்துப் போயிருக்கிறார்கள். அதாவது பாரபட்சம், ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவதாக நினைத்துக் கொண்டவர்களும் அவர்களில் இருக்கிறார்கள். ஆயுத மோதலுக்கு வலுக்கட்டாயமாகப் பிடித்துச் செல்லப்பட்டவர்களும் இருக்கிறார்கள். இள வயதில் ஏற்படும் ஆயுதக் கிளுகிளுப்புகளின் ஆகர்ஷிப்பால் போராட முன்வந்தவர்களும் இருக்கிறார்கள். வறுமைக்கு விடிவு தேடுவதற்காகவும், ஆதரவின்றித் தனி மரமாகிப் போய் விட்டதால் ஆயுத அமைப்பில் தஞ்சமடைந்தவர்களும் இருக்கிறார்கள்.

மறுதரப்பிலும் இந்த வகையறா மனிதர்களும் இருக்கவே செய்கிறார்கள். இதற்கும் அப்பால் வீட்டில் அடுப்பெரிய வேண்டுமென்பதற்காகச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். தேசபக்தியின் பேரால், இனத்தின் பேரால் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். சீருடைகளால் ஆகர்ஷிக்கப்பட்டுச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள்.

மரித்தவர்களை ஒரு தரப்பினர் மாவீரர்கள் ஆக்கிக் கொண்டார்கள். மறுதரப்பினர் மரித்தவர்களையும், மரிக்காதவர்களையும் "வீரமிக்க படையினர்" ஆக வரித்துக் கொண்டார்கள். மூவின மக்களும் அப்பாவிகளாகிப் போனார்கள். அவர்களை அப்பாவிகளாக வகைப்படுத்துவதே மிகச் சரியானதாகும்.

யுத்தகளத்தில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகளுக்கு 'ரோம் சமவாயம்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது. யுத்தக் கைதியைக் கூட மனிதாபிமானமாக நடத்த வேண்டுமென்பதும் ரோம் சமவாயத்தின் ஒரு விதி. இந்த நெறிமுறைகள் எல்லாம் கடைப்பிடிக்கப்பட்டனவா என்று கேட்டால் பதில்கள் கிடைக்காது.

இன முறுகலும், இன முரண்பாடுகளுமே இலங்கையில் யுத்தத்தை உசுப்பிவிட்ட காரணிகளாகும். சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்த அமரர் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா, நியாயமான தமிழ் மொழி உபயோகத்துக்கான முயற்சியை முன்னெடுத்தபோது கடுமையான எதிர்ப்புகளை சந்திக்க வேண்டியேற்பட்டது. யாழ் பொது நூலகம் எரிக்கப்பட்ட சம்பவத்தை முன்னாள் யாழ் அரசாங்க அதிபர் நெவில் ஜயவீர அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவை நேரடியாகச் சந்தித்துச் சொன்னபோது, ஜே.ஆரின் வாயிலிருந்து சிரிப்பே பதிலாக வந்ததாம். இந்த விடயத்தை 2008ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற பொது நிகழ்வொன்றில் நெவில் ஜயவீரவே வெளிப்படையாகச் சொன்னார்.

1977ஆம் ஆண்டு "யுத்தம் என்றால் யுத்தம், சமாதானம் என்றால் சமாதானம்" என்று சவால் விட்டவரே இந்த ஜே.ஆர்.தான். 1983ஆம் ஆண்டு ஜூலையில் இடம்பெற்ற தமிழ் மக்களுக்கு எதிரான இன சங்காரத்தை உசுப்பிவிட்டவரும், உதவியவரும் அன்றைய ஜனாதிபதி ஜெயவர்தனாதான்.

சிங்கள மக்களில் படருகின்ற செடி, கொடிகளாக தமிழ் மக்களை வர்ணித்தவர் முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜயதுங்க. சிங்கள மக்களின் இரத்தத்தில் நீச்சல் அடிப்போம் என்று சொன்ன தமிழ் அரசியல் தலைவர்களும் இருக்கிறார்கள். சுமார் 78,000 முஸ்லிம்கள் 72 மணித்தியால காலக் கெடுவுக்குள் வடக்கை விட்டு விரட்டியபோது மௌனம் காத்த தமிழ்த் தலைவர்களும் இருக்கிறார்கள். அப்பட்டமான பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தாலும் இன முறுகலாலும் உசுப்பிவிடப்பட்டதே இந்த மூன்று தசாப்த கால யுத்தமாகும்.

கொக்கட்டிச்சோலை, மயிலந்தன்னை, வீரமுனை உட்படப் பல இடங்களில் அப்பாவித் தமிழ் மக்கள் நூற்றுக்கணக்கில் வேட்டையாடப்பட்டிருக்கிறார்கள். முஸ்லிம் ஊர்காவல் படையினரின் அடாவடித்தனங்களுக்கு பலியான அப்பாவித் தமிழர்களும் இருக்கிறார்கள். சிங்கள எல்லைக் கிராமங்களில் வேட்டையாடப்பட்ட அப்பாவி சிங்கள மக்கள் இருக்கிறார்கள்.

தென்னிலங்கையில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களுக்கு அப்பாவிகளே இரையாக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே யுத்தத்தோடு சம்பந்தப்பட்ட சகல தரப்பினருமே அப்பாவி மக்களைத்தான் கூடுதலாகப் பலியெடுத்திருக்கிறார்கள். வடக்கில் 40 ஆயிரம் யுத்த விதவைகளும், கிழக்கில் 42 ஆயிரம் யுத்த விதவைகளும் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் கழிந்துவிட்ட நிலையிலும், இன்னமும் மீளவும் யுத்தம் ஒன்று ஏற்படாமல் தடுப்பதற்கான காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. புலம்பெயர் நாடுகளிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் நரிகள் இனவாதப் பாணியில் ஊளையிடுகின்றன. ஏட்டிக்குப் போட்டியாக சிங்களத் தரப்பிலிருந்தும் இனவாதக் கூச்சல்கள் கிளப்பப்படுகின்றன. யுத்தமொன்று மீண்டும் வந்தால் முன்னரைப்போல ஆயுதங்கள் மட்டுமே பேசும். மனிதாபிமானம் மௌனித்து விடும். எனவே யுத்தத்தில் பாதிக்கப்படுவது அப்பாவி மக்கள்தான் என்ற உண்மையை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

வெற்றி பெற்றவர்கள்தான் வரலாற்றை நிர்ணயிக்கிறார்கள் என்று சொல்வார்கள். மாவீரர்களோ, வீரமிக்க படையினரோ அல்ல. பாதிக்கப்பட்டாலும் மக்கள், மக்கள் மட்டும்தான் தீர்க்கமான சக்தி. அவர்கள்தான் உண்மையான மாவீரர்கள் அவர்கள்தான் உண்மையில் வீரம் மிக்கவர்கள்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

– ஒரு பறங்கிப் பெண்ணின் பார்வையில் –

# இலங்கையில் இனத்துவ அடையாளத்துக்கான போராட்டங்கள்



வன்னிக் காட்டுக்குள் வாழ்வைத் தொலைத்தவர்கள். எதிர்காலத்தின் சுபீட்சம் குறித்து கனவு காண்கிறார்களோ தெரியவில்லை.

(நேற்றைய தொடர்ச்சி)

நியூசிலாந்தில் ஒரு ரக்பி போட்டியைப் பாருங்கள் அப்போது நியூசிலாந்தின் தேசிய கீதம் இசைக்கப்படுவதை உங்களால் கேட்க முடியும். மயோரி மொழியிலும், ஆங்கிலத்திலும் தேசிய கீதம் இசைக்கப்படும். இதைப் போன்றுதான் தென்னாபிரிக்காவிலும் தேசிய கீதம் இசைக்கப்படுவதுண்டு. இந்த இரண்டு நாடுகளுமே இலங்கையைப் போன்று பல்லினங்களைக் கொண்டவை. இந்த நாடுகளில் பிரஜைகள் ஒவ்வொருவரும் அவரவர்களின் இனத்துவ மூலக்கூறுகளைக் கவனத்தில் எடுக்காமல் நாட்டில் 'உள்ளீர்க்கப்பட்டவர்களாக' உணரக் கூடிய வகையில் விடயங்கள் கையாளப்பட்டுள்ளன.


இலங்கையில் ஒருவர் ஸ்ரீலங்கா மாதா என்று கீதம் இசைக்கும் போது தான் "புறக்கணிக்கப்பட்டவனாக" உணர்வது போன்ற நிலைமை, மேலே குறிப்பிட்ட நாடுகளில் இல்லை. எனது வகுப்பு இடாப்பில் என்னைப் பறங்கியர் என்று குறிப்பிடப்பட்டு இருந்ததால் நான் அந்த இனத்தைச் சேர்ந்தவள் என்பதை உணர்ந்து கொண்டேன்.

இவ்வாறுதான் எனது வகுப்பில் உள்ள அனைவரும் வகைப்படுத்தப்பட்டிருந்தனர். சிலர் எனது வகுப்பிலேயே இருக்கவில்லை. ஏனென்றால் அவர்களுக்கு தமிழில் வகுப்புக்கள் இருந்தன. இரண்டே இரண்டு தேசிய மொழிகளுக்கு மத்தியில் எம் அனைவரினதும் தொடர்பாடலுக்கான இணைப்பு மேடையாக இருக்க வேண்டுமென கருத்தப்பட்ட "இணைப்பு மொழியான ஆங்கிலம் ஒவ்வொரு நாளும் 40 நிமிட நேரம் மட்டும்தான் வகுப்பில் கற்பிக்கப்பட்டது. அவ்வளவுதான். நினைத்துப்பாருங்கள் இதுதான் "இணைப்பு மொழி". வீடுகளில் ஆங்கிலத்தில் பேசக்கூடிய சந்தர்ப்பம் உள்ளவர்களுக்கு வகுப்பறையில் போதிக்கப்படுபவற்றுக்கு மேலதிகமாகக் கற்றுக் கொள்ளக்கூடியவாய்ப்பு அவர்களுக்கு உண்டு அதாவது வீட்டில் ஆங்கிலத்தில் பேசாதவர்கள், ஒதுக்கப்படுகிறார்கள் என்பது தெட்டத் தெளிவானது.

மிகச் சொற்பமானவர்கள் மட்டுமே சரளமாக ஆங்கிலம் பேசக்கூடியவர்களாக இருந்தனர். இது ஆங்கிலம் பேசக் கூடியவர்களுக்கு தாம் பெரிய மனிதர்கள் என்ற மனப்பான்மையைக் கொடுத்தது.

பல்லின, பல மத சமூக அமைப்பைக்கொண்ட இலங்கையில் நாம் ஆழ்ந்து யோசிக்க வேண்டிய விடயங்கள் இருக்கின்றன. சிங்களத்தையும், தமிழையுமே தேசிய மொழிகளாகக் கொண்ட ஒரு நாட்டில், ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்கின்ற நிலையில், ஆங்கிலத்தில் கற்பிக்கின்ற ஓர் அரசாங்கப் பாடசாலையை என்னால் பார்க்க முடியாமல் போனது ஏன்? சிங்கள மொழியில் படிக்க விரும்பியவர்களுக்கு தமிழ் இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப்பட்டது. அதனைப்போன்று தமிழ் மொழியில் கற்கை நெறியைத் தேர்ந்தெடுத்தவர்களுக்குச் சிங்களம் இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப்பட்டது. நான் இலங்கையில் இருந்தபொழுது, சிங்களத்தையும், ஆங்கிலத்தையும் பேசும் ஒரு நாட்டில் தமிழைக் கற்க வேண்டிய தேவை உண்டு என்பதை உணரத் தவறிவிட்டேன்.

மொழிப் பிரச்சினை ஏற்படுத்தப்பட்ட இப் பாடசாலைகளில்



செலீனா கிராம்மர்

சமயமும் இருந்தது. மிகவும் அதிர்ச்சி தரக் கூடிய ஒரு உதாரணம், இலங்கையில் உள்ள சில பாடசாலைகளில் "நிலவும் மாணவத் தலைவர்களின் தலைவன்" என்ற அமைப்பு முறை நான் கல்விகற்ற ஒரு பாடசாலையில் எல்லா மாணவத் தலைவர்களுக்கும் தலைமைவகிக்கக் கூடிய மாணவத் தலைவர் பதவி பாடசாலை அதிபரின் மதத்தைச் சேர்ந்த சகலதுறை ஆட்டக்காரருக்கு வழங்கப்பட்டது. இது ஏனைய சமய நம்பிக்கை கொண்டவர்களுக்கு, பாடசாலை அதிபரின் சமயத்தைப் பின்பற்றாதவர்களை விட 'குறைந்தவர்கள்' என்ற உணர்வையே கொடுத்தது. ஆனால் ஒருவரின் சமய நம்பிக்கை, கல்விப் பெறுபேறுகளில் எப்போதாவது ஏதாவது செய்யக்கூடியதாக இருக்குமா?

எமது நாட்டின் கல்வி அமைப்பு முறை எவ்வாறு சமூகங்களுக்கிடையில் பிரிவினைகளை ஏற்படுத்துவதற்கு பங்களித்தது, நாட்டைச் சிதைவுறச் செய்தது என்பதை என்னால் சிந்தித்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. எனது உயர் கல்வியைத் தொடர்வதற்காக நான் பிரான்சுக்கு வந்தபோது, எமது இலங்கைக் கல்வி அமைப்பு முறை என்றுமே எம்மை முன்னிலைக்கு கொண்டு செல்லாது என்பதை நான் உணர்ந்து கொண்டேன். நாட்டிலுள்ள நான்கு தேசிய இனங்களையும் ஒன்றிணைத்து, ஒரு தேசிய அடையாளத்தை உருவாக்க எமது கல்வி அமைப்பு முறை தவறிவிட்டது.

பூராயம் பார்ப்பவர்களுக்காக எங்களை நாங்கள் இனத்தின் பேரால் அடையாளப்படுத்த வேண்டி இருப்பதை நான் உணர்ந்து கொள்கின்றேன். நீ ஒரு இலங்கையன் என்று சொன்னால் மட்டும் போதாது நாம் அனைவரும் எமது இனங்களைக் குறிப்பட்டு மேலும் எங்களை அடையாளம் காட்ட வேண்டி இருக்கிறது. ஆனால் அது ஒருவர் மற்றவரை விடச் சிறந்தவர், பலமானவரா? பலவீனமானவரா? அல்லது கறுப்பானவரா? வெள்ளையானவரா?, உயர்ந்தவரா? குள்ளமானவரா? என்று பார்ப்பதற்காக வென்று கருதமுடியாது.

முப்பது வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்த யுத்தம் 2009 இல் தான் முடிவுக்கு வந்தது. அந்த யுத்தத்தில் இருந்து இப்போது தான் இலங்கை வெளியே வந்திருக்கின்றது அன்றிலிருந்து யுத்தத்தின் காயங்களை ஆற்றிப் புனரமைக்க, இலங்கை படிப்படியாக முன்செல்ல முயன்று வருகின்றது. இனத்துவ மோதலால் மூட்டப்பட்ட ஒரு யுத்தத்தின் முடிவில் நல்லிணக்கம் என்பது முக்கியமானதொரு வழிமுறையாகும்.

சிங்களவர், தமிழர் ஆகிய இரண்டு சமூகத்தவரிடையே உள்ள கொந்தளிப்பான நிலைக்கு தீர்வு காணப்பட்டு, நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும். நல்லிணக்கம் என்ற வினைச்சொல் தன்னகத்தே மிகவும் அர்த்தத்தைக் கொண்டிக்கிறது.

அதாவது, ஒரு காலத்தில் ஒன்றுபட்டிருந்து, இப்போது பிரிந்திருக்கின்ற நிலையைக் கைவிட்டு முன்னைய ஒன்றுபட்ட நிலையை ஏற்படுத்துவதே இதன் அர்த்தமாகும். நாட்டிலுள்ள நான்கு சமூகத்தவர்களும் தற்போது கொந்தளிப்புக்குள் சிக்கியிருக்கும் நிலையில் பல வருடங்களாக நிலவிய சமாதான சகஜீவனத்தைத் தேட வைக்கிறது. மீள ஐக்கியத்தை ஏற்படுத்த முயற்சி எடுப்பதற்கு முன்னதாக, கொந்தளிப்பை ஏற்படுத்திய காரணங்களைத் தேடிக்கண்டுபிடிக்க வேண்டும். கடந்த காலத்தில் செய்த தவறுகளை மீண்டும் செய்யாமல் இருப்பதற்காக முன்னேறிச் செல்வதற்கு முன்னர் கடந்த காலத்தை திரும்பிப் பாருங்கள். இவை அனைத்திலுமே நான் என்னை பூரணமாக இனங்காட்டிக் கொண் டுள்ளேனா என்ற கேள்வி தொடர்ந்தும் இருக்கிறது. இல்லவே இல்லை. அதற்கு நான் இன்னமும் போராடிக்கொண்டுதான் இருக்கிறேன்.


# பாண்டி பஜார் மோதலில்

## பின்புலங்களும் முன்னோட்டமும்

30 வருடங்களுக்கு முன்னர் சென்னை, பாண்டி பஜாரில் நடைபெற்ற துப்பாக்கி மோதலையடுத்து கைது செய்யப்பட்டவர் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன்.

புளொட் இயக்கத் தலைவர் உமா மகேஸ்வரனுக்கும், புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் இந்த மோதல் இடம்பெற்றது. இந்த வழக்கோடு சம்பந்தப்பட்ட பிரபாகரன், சிவகுமார், நிரஞ்சன், ஜோதீஸ்வரன் ஆகியோரின் பெயர்களை வழக்கில் இருந்து நீக்கக் கோரும் மனு ஒன்றினை நீக்கக்கோரும் மனுவென்றினை சென்னை செஷன்ஸ் நீதிமன்றில் சி.பீ.சீ.ஐ.டீ. பொலிஸ் பிரிவினர் தாக்கல் செய்தனர்.

பிரபாகரன் மூன்று வருடங்களுக்கு முன்னர் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற மோதலின்


உமா மகேஸ்வரன்

போது கொல்லப்பட்டு விட்டார். நிரஞ்சனும் இறந்து விட்டார். சிவகுமார் எங்கிருக்கிறார் எனத் தெரியாதெனக் குறிப்பிடப்பட்டது. ஜோதீஸ்வரன் கொங்கொங்கில் வசிக்கின்றார் எனவும் நீதிமன்றில் தெரி விக்கப்பட்டது. இதனையடுத்து பிரபாகரனின் பெயரை மேற் குறிப்பிட்ட வழக்கில் இருந்து சென்னை செஷன்ஸ் நீதிமன்றம் நீக்கியுள்ளது. புலிகெள் இயக்க தலைவர் பிரபாகரனும், புளொட் இயக்க தலைவர் உமா மகேஸ்வரனும், சென்னை பாண்டி பஜாரில், தமக்கிடையே துப்பாக் கியால் சுட்டுக் கொண்டனர். 1982-ம் ஆண்டு, மே மாதம் 19ஆம் திகதி இது நடைபெற்றது.

அதற்கு முன்னரே இரு தரப்புக்கும் முறுகல் நிலை இருந்து வந்தது.

பாண்டிபகார் மோதல் இடம்பெறுவதற்கு ஐந்து மாதங்களுக்கு முன், யாழ்ப்பாணத்தில், ஜனவரி 2ம் திகதி புளொட் இயக்க முக்கியஸ்தர் சுந்தரம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

புலிகள் இயக்க உறுப்பினர் சீலன் என்பவரால் இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. சுந்தரம், புளொட் இயக்கத்தின் ‘புதிய பாதை’ என்ற சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தவர். உமா மகேஸ்வரனின் வலதுகரமாகச் செயற்பட்டவர்.

சுந்தரம் கொல்லப்பட்டதால் புளொட் தலைவர் உமா மகேஸ்வரன், புலிகளின் பார்வை அடுத்துத் தம்மீது திரும்பும் என்பதைப் புரிந்துகொண்டு படகு மூலம் தமிழகம் சென்றார்.

மே மாதம் 19-ம் திகதி சென்னை பாண்டிபஜாரில் உள்ள உணவு விடுதி ஒன்றுக்கு வந்தனர் உமா மகேஸ்வரனும், அவரது இயக்கத்தைச் சேர்ந்த கண்ணன் என்பவரும். இந்த இருவரும் உணவகத்துக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்ட தமது மோட்டார் சைக்கிளை நெருங்கியபோது, வெளியே பிரபாகரன் நிற்பதை கவனித்து விட்டார் உமா மகேஸ்வரன்.

பிரபாகரனுடன் அவரது இயக்கத்தை சேர்ந்த ராகவன் என்பவரும் நின்றிருந்தார். இது நடப்பதற்கு ஓரிரு வாரங்களுக்கு முன், சென்னை மவுன்ட் ரேடில் (தற்போது அண்ணாசாலை) உள்ள தியேட்டர் ஒன்றுக்கு வெளியே வைத்து, பிரபாகரன், உமா மகேஸ்வரனை சுட முயற்சித்ததாகவும், உமா மகேஸ்வரன் தப்பித்து விட்டதாகவும் ஒரு தகவல் உண்டு.

பாண்டி பஜாரில் பிரபாகரனைக் கண்டவுடன், அவர் தம்மை சுடுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்க கூடாது என்று தம்மிடமிருந்த துப்பாக்கியை உருவினார் உமா மகேஸ்வரன். கிட்டத்தட்ட அதே எண்ண ஓட்டத்துடன், அதே கணத்தில், தம்மிடம் இருந்த துப்பாக்கியை உருவினார், பிரபாகரன். இருவரும் சுடத் தொடங்கினார்கள். பாண்டி பஜாரில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள நேரம் அது.

பிரபாகரன் தனது கைத்துப்பாக்கியால் ஆறு தடவைகள் சுட்டார். ஆனால், உமா மகேஸ்வரன் எந்தக் காயமுமின்றித் தப்பித்துக் கொண்டார். ஆனால், உமா மகேஸ்வரனுடன் வந்த கண்ணன் மீது துப்பாக்கி சூடு பட்டு இரத்தம் வழிந்தது.

பிரபாகரனின் துப்பாக்கியில் தோட்டாக்கள் தீர்ந்துவிட்ட நிலையில் அதற்குமேல் சுட முடியவில்லை. உமா மகேஸ்வரன் துப்பாக்கியால் சுட்டதில் இருந்தும் பிரபாகரன் தப்பித்துக் கொண்டார்.

சம்பவ இடத்தில் இருந்து உமா மகேஸ்வரன் விரைவில் தப்பிச் சென்று விட்டார். துப்பாக்கிச் சூட்டால் அதிர்ச்சியடைந்த மக்களின் கவனம், பிரபாகரன், மற்றும் ராகவன் மீது படிந்தது. மக்கள் இவர்களை பிடிக்க வர, பிரபாகரனும் ராகவனும் பாண்டி பஜாரில் ஓடத் தொடங்கினர். பொதுமக்கள் துரத்திச் செல்ல, பாண்டி பஜார் வீதியில் ஓடிய பிரபாகரனை எதிரே வந்த ஒருவர் மடக்கிப் பிடித்தார். தமிழக காவல்துறையைச் சேர்ந்த கான்ஸ்டபிள் அவர். பெயர் மாணிக்கம். மாம்பலம் பொலீஸ் ஸ்டேஷனில் பணிபுரிந்தவர்.

பிரபாகரனை அதிகாரபூர்வமாக கைது செய்த ஒரே நபர், தமிழக காவல்துறையைச் சேர்ந்த கான்ஸ்டபிள், மாணிக்கம்தான். தப்பிச் சென்ற உமா மகேஸ்வரனால் சில தினங்கள் தலைமறைவாக இருக்க முடிந்தது.

ஆறாவது தினம் (மே 25-ம் தேதி), கும்மிடிப் பூண்டி ரயில் நிலையத்தில், உமா மகேஸ்வரனை பொலிசார் சுற்றி வளைத்து கைது செய்தனர். அப்போது, உமா மகேஸ்வரன் துப்பாக்கியால் சுட்டதில், தமிழக காவல் துறையை சேர்ந்த ஒரு பொலிஸ்காரர் காயமடைந்தார். இதற்கு முன், மே 23-ம் தேதி நிரஞ்சன் என்பவர் இந்த துப்பாக்கிச் சூடு தொடர்பாக, சைதாப்பேட்டையில் கைது செய்யப்பட்டார். பிரபாகரன், உமா மகேஸ்வரன், ராகவன், கண்ணன், நிரஞ்சன் ஆகிய ஐந்து பேரும், சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். இந்த செய்தி இலங்கையை அடைந்தது. அந்த நாட்களில் இலங்கையில் பிரபாகரன் 18 கொலைகள், 2 வங்கிக் கொள்ளைகளில் தேடப்படும் நபராக இருந்தார். அதேபோல உமா மகேஸ்வரன், 9 கொலைகள் 1 வங்கிக் கொள்ளை ஆகியவற்றில் தேடப்படும் நபராக இருந்தார். தவிர இவர்களது ஈழ விடுதலை இயக்கங்கள் இலங்கை அரசுக்கு அச்சுறுத்தலாக இருந்தன.

இலங்கையின் அப்போதைய துணை பாதுகாப்பு அமைச்சர் டி.பி.வேரபிட்டிய, இந்த இருவரையும் கைது செய்த தமிழக காவல்துறைக்கு 10 இலட்சம் ரூபா பரிசை அறிவித்தார். (பிரபாகரனை கைது செய்ததற்கு 5 இலட்சம் ரூபா, உமா மகேஸ்வரனை கைது செய்ததற்கு 5 லட்சம் ரூபா.

அத்துடன், தமிழக காவல்துறையால் கைது செய்யப்பட்ட பிரபாகரன், உமா மகேஸ்வரன் ஆகியோரை இலங்கைக்கு நாடு கடத்தி கொண்டு செல்ல இலங்கைப் பொலிஸ் மா அதிபராக இருந்த ருத்ரா ராஜசிங்கம் என்பவரை சென்னைக்கு அனுப்பி வைத்தது இலங்கை அரசு. ருத்ரா ராஜசிங்கம் சென்னை வந்து இறங்கினார். அப்போது விடுதலைப்புலிகள் இயக்கத்தை சேர்ந்த பேபி சுப்ரமணியம், ப.நெடுமாறனை சந்தித்து பிரபாகரனை நாடுகடத்துவதை தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை விடுத்தார். இது நடைபெற்றது 1982 ஆம் ஆண்டு.

நெடுமாறன், தி.மு.க. தலைவர் கருணாநிதியுடன் தொடர்பு கொண்டார். பிரபாகரனையும், உமா மகேஸ்வரனையும் நாடு கடத்தாமல் இருப்பதற்கு என்ன செய்யலாம் என்று ஆலோசனை நடத்தினார். கருணாநிதி கொடுத்த ஐடியாவின்படி, சர்வ கட்சி கூட்டம் ஒன்றை கூட்டினார். இது நடைபெற்ற காலத்தில் புலிகள் உட்பட ஈழ போராளிகள் குழுக்கள் எதுவும் பெரிதாக பிரபலமாக இருக்கவில்லை. பிரபாகரன் என்றால் யார் என்று தமிழகத்தில் பெரும்பாலானோருக்கு தெரியாது.

சர்வ கட்சிகளும் மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் கொடுத்த அழுத்தம் காரணமாக, பிரபாகரனையும், உமா மகேஸ்வரனையும் நாடு கடத்துவதில்லை என்ற முடிவை எடுத்தது மத்திய அரசு. பிரபாகரன், உமா மகேஸ்வரன் ஆகிய இருவரையும் இந்தியாவில் இருந்து நாடு கடத்தாமல் செய்ததில் முக்கிய பங்கு வகித்தவர், கருணாநிதி என்பது பலருக்கும் தெரியாது.


எதிர்க் கட்சித் தலைவராக இருந்த கருணாநிதி ஐடியா போட்டுக் கொடுத்தார் என்பதை பின்னாட்களில் நெடுமாறன் ஒப்புக்கொண்டார். மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்தவர், முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர்.

மத்திய அரசு, ”இவர்களை நாடு கடத்த முடியாது” என அறிவித்ததையடுத்து, வெறும் கையுடன் இலங்கை திரும்பினார் பொலிஸ் மா அதிபர் ருத்ரா ராஜசிங்கம்.

இந்த வழக்கு ஆகஸ்ட் 6-ம் தேதி சென்னை கோர்ட்டில் விசாரணைக்கு வந்தபோது, பிரபாகன், உமா மகேஸ்வரன் இருவரையும் நிபந்தனையுடனேயே பிணையில் விடும் தீர்ப்பு வழங்கப்பட்டது. நிபந்தனைகள் இவைதான். இருவரும் நாட்டை விட்டு வெளியேற கூடாது. வழக்கு முடியும்வரை இருவரும் ஒரே நகரத்தில் இருக்கக் கூடாது.

உமா மகேஸ்வரன் சென்னையிலும், பிரபாகரன் மதுரையிலும் வழக்கு முடியும்வரை தங்கியிருக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது நீதிமன்றம். அதையடுத்து உமா மகேஸ்வரன் சென்னையில் பெருஞ்சித்தனார் வீட்டிலும், பிரபாகரன் மதுரையில், நெடுமாறன் வீட்டிலும் தங்கியிருந்தனர்.

சிறிதுகாலம் மதுரையில் இருந்த பிரபாகரன், தலைமறை


பிரபாகரன்

வாகி, இலங்கை சென்றுவிட்டார். இவர் மீது ஆயுத தடைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கு, 7-வது கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தது. வழக்கில் முதல் குற்றவாளியாக பிரபாகரனின் பெயர் உள்ளது. அந்த வழக்கில் இருந்துதான், பிரபாகரனை நீக்க வேண்டும் என தமிழக சி.பி.சி.ஐ.டி. போலீசார் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

”முதல் குற்றவாளியாக சேர்க்கப்பட்ட பிரபாகரன், இலங்கையில் நடந்த போரில் கொல்லப்பட்டார். அவரது உடல் நந்திக்கடல் பகுதியில் 2009-ம் ஆண்டு மே 19-ம் தேதி கண்டு பிடிக்கப்பட்டது என்று புதுடெல்லியில் உள்ள இன்டர்போல் உதவி இயக்குனர் தகவல் அனுப்பியுள்ளார்.

சிவகுமார் (ராகவன்) இந்தியாவைவிட்டு வெளியேறி 15 ஆண்டுகள் ஆகிவிட்டதால் அவர் எங்கிருக்கிறார் என்ற தகவல் இல்லை. ஜோதீஸ்வரன் (கண்ணன்), ஹொங்காங் நாட்டில் இருப்பதாக தகவல் வந்துள்ளது.

நிரஞ்சன் இறந்துவிட்டதாக சி.பி.சி.ஐ.டி.க்குத் தகவல் வந்துள்ளது. எனவே, இந்த வழக்கிலிருந்து பிரபாகரன், சிவகுமார், ஜோதீஸ்வரன், நிரஞ்சன் ஆகியோரை நீக்குமாறு உத்தரவிட வேண்டும்” என்று கூறப்பட்டுள்ளது. பாண்டி பஜாரில் துப்பாக்கி யால் சுட்டுக்கொண்ட இருவரில் உமா மகேஸ்வரன், 1989-ம் ஆண்டு சுட்டு கொல்லப்பட்டார். அவரது தலைமையில் இருந்த புளொட் இயக்கம், தற்போது சித்தார்த்தனைத் தலைவராக கொண்டு இயங்குகிறது.

**சம்பவ இடத்தில் இருந்து உமா மகேஸ்வரன் விரைவில் தப்பிச் சென்று விட்டார். துப்பாக்கிச் சூட்டால் அதிர்ச்சியடைந்த மக்களின் கவனம், பிரபாகரன், மற்றும் ராகவன் மீது படிந்தது. மக்கள் இவர்களை பிடிக்க வர, பிரபாகரனும் ராகவனும் பாண்டி பஜாரில் ஓடத் தொடங்கினர். பொதுமக்கள் துரத்திச் செல்ல, பாண்டி பஜார் வீதியில் ஓடிய பிரபாகரனை எதிரே வந்த ஒருவர் மடக்கிப் பிடித்தார். தமிழக காவல்துறையைச் சேர்ந்த கான்ஸ்டபிள் அவர். பெயர் மாணிக்கம். மாம்பலம் பொலிஸ் ஸ்டேஷனில் பணிபுரிந்தவர்.**



# தீபங்கள் பேசும் கார்த்திகை மாதம் இது

கார்த்திகை விளக்கீடு என்பது கார்த்திகை மாதத்தில் வரும் பௌர்ணமி திதியும், கார்த்திகை நட்சத்திரமும் கூடிய திருக்கார்த்திகை நாளில் கோயில்களிலும், வீடுகளிலும் இடம் பெறும் சிறப்பான தீபத் திருவிழாவாகும். கார்த்திகை மாதம் பௌர்ணமி நாளில் கார்த்திகை நட்சத்திரம் வரும் நாளில் திருவிளக்கேற்றி வழிபடுவதனால் கார்த்திகை தீபம் எனப் பெயர் பெற்றது. கார்த்திகை நாளில் வரிசையாகத் திருவிளக்கேற்றி எங்கும் கொண்டாடும் வழக்கம் புராதன காலந்தொட்டு இருந்து வருகிறது. இந்த அழல் வழிபாடு தரிசனம் திருவண்ணாமலையில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றுகின்றது. அன்றைய தினம் திருவண்ணாமலை அழற் சோதி மலையாய், அருணாசலமாய், சோணகிரியாய் இலங்கும். ஐஅருணம், சோணம் - சிகப்பு நிறம்ஸ

"ஆடிப்பாடி அண்ணாமலை தொழ ஓடிப்போம் நமதுள்ள வினைகளே" என்கின்றனர் அப்பர் சுவாமிகள். திருவண்ணாமலையில் தீபம் ஏற்றப்படுவதற்கான புராண வரலாறு மிகவும் பிரசித்தமானது.

திருவண்ணாமலை புண்ணிய பூமி. ஆன்மிக பூமி. யோகிகள், ஞானிகள், தபோதனர்கள், சித்தர்கள் வாழ்ந்த வாழ்கின்ற பூமி. தன்னை நாடி வந்தவர்க்கெல்லாம் அருள் வழங்கும் மலை. ஜாதி, மதம், இனம், மொழி வேறுபாடின்றி அனைவருக்கும் முக்தி தரும் மலை. உலகப் புகழ் பெற்ற தீப தரிசனம், பௌர்ணமி புகழ் கிரிவலம் வரும் மலை திருவண்ணாமலையாகும்.

அடி முடி காணமுடியாத அனற் பிழம்பாகத் திருவண்ணாமலையில் எம்பெருமான் எழுந்தருளியுள்ள தத்துவத்தை உலகிர்க்கு உணர்த்தவே திருமாலும் நான்முகனும் எம் பெருமானின் அடிமுடி தேடினர் என்று சொல்லப்படுகிறது.

படைத்தல் தொழிலைச் செய்யும் பிரம்மனும் காத்தல் தொழிலைச் செய்யும் விஷ்ணுவும் நானே பெரியவன் என்று வாதாடிப் பலவருடங்கள் போரிட்டனர். இவர்களின் கர்வத்தைத்தை அடக்க எண்ணிய சிவபெருமான் இவர்கள் முன் சோதிப்பிழம்பாகத் தோன்றினார். அடியையும் முடியையும் தேடும்படி அசரீரி கூறியது. அவ் ஜோதியின் முடியைக் காண அன்னப்பறவை வடிவங் கொண்டு சதுரமுகப் பிரம்மன் விண்ணுலகம் சுற்றினார். அடியைக்காண திருமால், வராஹ் அவதாரம் எடுத்து பாதாள லே?கம் சென்று அடிமலரடியைத் தேடினார்.

அடிமுடி காணமுடியாத பரம்பொருளாக விளங்கினார் எம்பெருமான். அதனால் இருவரும் சிவபெருமானே முழு முதற் கடவுள் என்று ஏற்றுக்கொண்டனர். அவர்கள் இருவரும் தாம் கண்ட சோதியை எல்லோரும் காணும்படி காட்டியருள வேண்டும் என்று விண்ணப்பிக்க அவர் திருக்கார்த்திகை நட்சத்திரத்தன்று ஜோதிப்பிழம்பாக காட்டிச்சியருளினார். இந்தத் தத்துவத்தை விளக்குவதே கார்த்திகை விளக்கீடு ஆகும்.

யோக நெறியால் அன்றிக் காணமுடியாத தெய்வ ஒளியைக் திருவண்ணாமலையில் ஏறத்தாழ மூவாயிரம் அடி உயரத்தில் உள்ள மலைமேல் திருக்கார்த்திகை நட்சத்திரத்தன்று காணலாம்.


**காந்த மலையிலே கலியுக தெய்வம் அருள்மிகு ஐயப்பனின் மகர ஜோதி!**

**திருவண்ணாமலையிலே அவர்தம் ஐயனின் அண்ணாமலை ஜோதி!**

மலை மீது காணப்படும் பெரும் செப்புக் கொப்பரையில் இருபத்து நான்கு முழம் துணி திரியாகப் போடப்படும். ஒரு மணங்கு கற்பூரத் தூள் சேர்த்துத் திரி சுற்றப்பட்டிருக்கும். இருபது மணங்கு நெய் ஊற்றி தீபத்தை ஏற்றுவார்கள். அந்த ஜோதியைக் காண[illegible]க்கு பஞ்ச மூர்த்தியும் எழுந்தருளுவதாக ஐதீகம்.

இச்சோதியானது பல மைல்களுக்கு அப்பால் பல நாட்கள் ஒளிவீசும். இவ்வொளி இம்மலையை அடுத்து யாவும் செந்நிற சிகப்பு நிறம் பொருந்தி வண்ணமாய் ஒளிர்ந்திடும். ஜோதிலிங்கமாக காட்சி தரும் திருவாண்ணாமலை ஓர் அக்கினித் தலமாக விளங்குகிறது.

திருவண்ணாமலையில் குன்றின் சிகரத்தில் கார்த்திகை மாதத்தில் ஏற்றப்படும் ஜோதியானது, உலகம் முழுதும் உள்ள அஞ்ஞான இருளை அகற்றி மெய்ஞான ஒளியைப் பரப்பும் சிவஞான ஜோதியாகப் பிரகாசிக்கும் என்பது ஐதீகம். "உடம்பெனு மனையகத்து உள்ளமே தகழியாக மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனும் திரிமயக்கி இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கிற் கடம்பமர் காளைத்தாதை கழலடி காணலாமே."



அன்றைய தினம் பக்த கோடிகள் ஜோதியைக் கண்டு சேவிப்பதால் பஞ்ச மூர்த்திகளின் அருட்கடாட்சத்தால் பஞ்சேந்திரியங்களை அடக்கும் ஆற்றல் பெற்று, மெய்ஞான சிந்தையுடையவர்களாக விளங்குவர் என்பது உட்பொருள். இந்த ஜோதியின் காரணமாகத்தான் மற்ற இடங்களில் சொக்கப்பனை கொளுத்தும் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

தீபம் ஏற்றி வழிபட முடியாத சிவ, வஷ்ணு ஆலயங்களின் முன்புறத்தே வாழை மரம் நட்டு தென்னோலைகளால் அதனை சுற்றி அடைத்து "சொக்கப்பானை"க்கு அக்கினியிட்டு சோதி வடிவாகக் காட்சியளிக்கச் செய்து சிவபெருமான் சோதிப்பிழம்பாகத் தோன்றிய காட்சியை நினைவு கூர்ந்து வழிபடுவர். ஜோதி மயமாய் ஒளி வடிவனாகிய இறைவனை உணர்த்தும். சொக்கப்பனாகிய சிவனை ஒளி

வடிவாகக் காண்பிப்பதால் இது சொக்கப்பனை எனப் பெயர் பெற்றது.

சிவபெருமான் கே?யில் கொண்டுள்ள ஆயிரத்தெட்டு முக்கிய ஸ்தலங்களில் காசி, சிதம்பரம், திருவாரூர், திருவண்ணாமலை, காளஹஸ்தி ஆகிய ஐந்து க்ஷேத்திரங்களும் பஞ்சமூர்த்தி ஸ்தலங்களாகக் கெ?ண்டாடப்படுகின்றன. பிருத்வி, அப்பு, தேயு, வாயு,ஆகாசம் ஆகியவை பிருத்வி பஞ்சமூர்த்தி ஸ்தலங்களாகும்.

உலகத்திலேயே புண்ணியத் தலங்களுள் காசிக்குப் போவதே தலையாயப் புண்ணியமாக கருதுவர். திருவாஷரூரில் பிறந்தலே முத்தி கிடைக்கும் என்பர். ஆனால் இருந்த இடத்தில் இருந்தபடி மனதால் நினைத்தாலே புண்ணியம் தரும் ஸ்தலம் ஒன்று உலகில் உள்ளதென்றால் அது அண்ணாமலையாரும் உண்ணாமுலை அம்மனும் குடிகொண்டிருக்கும் திருவண்ணாமலைதான்.

பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்தில், “வேலின் நோக்கிய விளக்க நிலையும்" என்பதற்குக் கார்த்திகை நாளில் ஏற்றிய விளக்கு என்பது பொருள். பண்டைக் காலம் தொட்டே கார்த்திகை விழா ஒரு பெரும் பண்டிகையாக நம்மவர்கள் இன்றும் கொண்டாடி வருகிறார்கள். பழைய காலங்களில் மலைச் சிகரங்களில் விளக்கேற்றி விழா கொண்டாடி விருந்துண்டு, களிகொண்டு ஆடி களித்திருப்பதை சங்க நூற்களில் சான்று உண்டு. ஆகவே, மேற்கூறியதிலிருந்து கார்த்திகை விழா நமது ஆணவ இருளைப் போக்கி ஞான ஒளியைப் பெருக்குவதற்கு உகந்த விழாவாகும் என்பது விளங்குகிறது.

அக்கினியின் சக்தியால் அழுக்கு களையப்படுகிறது. அக்கினிப் பிரவேசம் சீதா பிராட்டியை புனிதவதி எனக் காட்டியதாக இராமயணம் உலக்குக்கு உணர்த்தியது. ஹோமத்தில் எழுகின்ற அக்கினியின் வாயிலாக ஆண்டவனுக்கு அவிர்பாகம் அளிக்கின்றோம். கார்த்திகை மாதம் முதல் தேதி தொட்டு கடைசி நாள் வரை தினமும் மாலையில் வீடுகளிலும் ஆலயங்களிலும் விளக்கேற்றி வைத்துக் கொண்டாடுவர்.

தினமும் விளக்கேற்ற இயலாதவர்கள் துவாதசி, சதுர்த்தசி, பௌர்ணமி ஆகிய மூன்று தினங்களிலாவது தவறாது எண்ணெய் விளக்கேற்ற வேண்டும். கார்த்திகைமாதம் 1, 28 ஆகிய இரு தேதிகளில் கார்த்திகை நட்சத்திரம் வருமாயின் 28-ம் தேதி வரும் நட்சத்திரத்தில்தான் திருக்கார்த்திகைப் பண்டிகை கொண்டாடப்பட வேண்டும்.

இந்த கார்த்திகைத் திருநாள் கார்த்திகேயனுக்கும் உகந்த நாள். சிவபெருமானின் நெற்றிக் கண்ணினின்றும் தோன்றிய ஆறு அருட்சுடர் சரவணப் பொய்கையில் வந்து தங்கி ஆறு குழந்தைகளாக உருமாறி நிற்க அக்குழந்தைகளைக் கார்த்திகைப் பெண்கள் பாலுட்டிச் சீராட்டித் தாலாட்டினர்.

சிவபெருமான் பிராட்டியாருடன் சரவணப் பொய்கைக்கு எழுந்தருளி உமாதேவியார் அக்குழந்தைகளை வாரி அணைக்க, ஆறு உருவங்களும் ஓருருவாய்- ஆறுமுகக்குழந்தையாய்- தேவியின் திருக்கரங்களில் பேரெ?ளிப் பிரகாசமாய் எழுந்தருளியது. அவ்வமயம் கார்த்திகைப் பெண்டிர் சிவபெருமானைப் பணிந்து பே?ற்றி நின்றனர்.

சிவபெருமான் அவர்களை அருள் நோக்கி” உங்களுக்கு மங்களம் உண்டாகுக! உங்களால் வளர்க்கபட்ட இப்பாலகனுக்கு கார்த்திகேயன் என்ற திருநாமத்தைச் சூட்டுகிறோம். உங்களுக்கு உகந்த இக்கார்த்திகை நன்னாளில் கந்தனைப் போற்றி வழிபடுவோருக்கு அனைத்து நலங்களும் கிட்டுவதாகுக!” என்று திருவாய் மலர்ந்தருளினார். இறைவனை விளக்கேற்றி வழிபடுவது தொன்றுதொட்டு வந்த பழக்கமாயினும், அது என்றென்றும் நலம் தரும் வழிபாடாகவும் கருதப்படுகிறது.


வைஷ்ணவ ஆலயங்களிலும் விளக்கொளிப் பெருமாள் என்று ஒரு பெருமானைக் கொண்டாடுகினனர். அகல், எண்ணெய், திரி, சுடரொளி ஆகிய நான்கும் அறம், பொருள். இன்பம், வீடு என்ற தத்துவங்களை உணர்துவது போலாகும். பலிமகராஜன் தனது உடம்பிலே தோன்றிய வெப்பத்தைக் கார்த்திகை விரதமிருந்து தீர்த்துக்கொண்டார் என்று புராணம் கூறுகிறது.


எம்பெருமான் தன்மீது திருவடி சாதித்து ஆட்கொண்ட போது தனது மறைவு நாளை தீபங்களை ஏற்றி உலகோர் அனைவரும் கொண்டாடவேண்டும் என்று அனந்தனைப் பணிந்த் கேட்டான். திருஞானசம்பந்தர், மயிலையில் அங்கம் பூம்பாவைக்கு புத்துயிர் அளிப்பதற்காய்ப் பாடிய திருப்பதிகத்தில், கார்த்திகை விளக்கீடு காணாத போதியே? என்று பாடியுள்ளார்.

ஒருமுறை அம்பிகை மகிஷாசுரனுடன் போர்புரியும் போது தவறுதலாக சிவலிங்கம் ஒன்றை உடைத்துவிட்டார் என்றும் அதனால் ஏற்பட்ட தோஷத்தை நிவர்த்திசெய்துகொள்வதற்குக் கார்த்திகை தினத்தன்று தீபம் ஏற்றி விரதம் இருந்து பெருமானின் பேரருளால் தோஷ நிவர்த்தி கிடைத்ததாக தேவி புராணம் கூறுகிறது.

இவ்வாறு பெருமையும் மேன்மையும் கொண்ட கார்த்திகைத் திருநாளை திருச்செங்கோடு, வேதாரண்யம் பழனி, திருச்செந்தூர் முதலிய கோயில்களில் திருவண்ணாமலைக் கோயிலைப்போன்றே கோலாகலமாகக் கொண்டாடுகின்றனர். சில ஊர்களில் மந்தாரை இலையில், தீபம் ஏற்றுகிறார்கள். வடநாட்டில் தீபத்தை தீப ஓடங்களில் ஏற்றி நீரில் விடுவது உடன்பிறப்பிற்கு நன்மை பயக்கும் என்று கருதுகிறார்கள். கார்த்திகைத் தீபங்கள் ஏற்றும் போது கூறப்படும் மந்திரம்: கீட :பதங்கா மதகாஸ்ச வ்ருதா ஜ்லே ஸ்தயே விசரந்தி ஜீவா த்ருஷ்ட்வா ப்ரதீபம் ந ச ஜந்ம பாகிந: பவந்தி நித்யம் சவ பசா ஹி விப்ரா. இந்த மந்திரத்தைச் சொல்லி விளக்கேற்றி வழிபடுவதால் இம்மையில் அனைத்து சுபீட்சங்களுடன் வாழ்ந்து எம்பெருமானின் பேரருளால் பிறவாப் பெருவாழ்வு பெறலாம். தீபத்தின் ஒளி காணும் இடத்தில் ஸ்ரீதேவி மங்களம் பொங்க வாசம் புரிவாள். இக்கார்த்திகை தினத்தன்று நெற்பொரி வைத்து நிவேதனம் செய்வர். கார்த்திகை விரதத்தை பன்னீரண்டு ஆண்டுகள் கடைப் பிடித்து நாரத மகரிஷி சப்தரஷிகளுக்கும் மேலான பத வியை அடந்தார். திரிசங்கு மன்னன், பகீரதன் கிருத்திகை விரதத்தின் பயனால் பேரரசானார்கள். அனைவருக்கும் பேரருள் கிட்டுவதாகுக.







# திருக்கார்த்திகைத் திருவிழா இன்று

(உடுவில்)

தாவடி ஸ்ரீ இராம கிருஷ்ண விவேகானந்த சேவாச்சிரமம் நடாத்தும் திருக்கார்த்திகைச் சிறப்பு விழா இன்று 27ஆம் திகதி 9.30 மணிமுதல் நடைபெறவுள்ளது. அன்றயதினம் தீபாரதனை, கூட்டுப் பிரார்த்தனை, கலந்துரையாடல் மற்றும் மகேஸ்வர பூசை என்பனவும் இடம்பெறவுள்ளன.

# காணாமற்போன பெண் டாக்டர் கண்டுபிடிக்கப்பட்டார்

காணாமல் போனதாகக் கூறப்படும் மாத்தறை வைத்தியசாலையைச் சேர்ந்த பெண் டாக்டர் அநுராதபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளாரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தறை வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை பிரிவில் சுய நினைவை இழக்க செய்கின்ற வைத்தியராக கடமையாற்றி வருகின்ற தனது மனைவியான எரந்தி கருணாரத்ன (வயது 27) என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை காணாமல் போயிருந்ததாக பொலிஸ் நிலையத்தில் இராணுவத்தில் டாக்டராகப் பணிபுரியும் இவரது கணவர் முறைப்பாடு செய்திருந்தார்.

# இன்று திருக்கார்த்திகை

## அக இருள் போக்கும் திருக்கார்த்திகை திருநாள்

முருகப் பெருமானுக்குரிய சிறப்பு மிக்க தினங்கள் பல இந்துக்களால் கைக்கொள்ளப்படுகின்றன. அவற்றில் மூன்று வகை விரத நாட்களும் அடங்குகின்றன. அவை வார விரத நாட்கள், மாத விரத நாட்கள், ஆண்டு விரதநாட்கள் என அமைகின்றன. சுக்கிரவார விரதம் வார விரதமாகவும் கார்த்திகை விரதம் மாத விரதமாகவும், கந்தசஷ்டி, திருக்கார்த்திகை என்பன ஆண்டு விரதங்களாகவும் கைக்கொள்ளப்படுகின்றன.

மாதந்தோறும் கார்த்திகை நட்சத்திரத்தில் கார்த்திகை விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. திருக்கார்த்திகை விரதமானது ஆண்டுதோறும் கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரம் அமையும் நாளில் மேற்கொள்ளப்படுகின்ற விர்தமாகும். ஏனைய மாதங்களில் வரும் கார்த்திகை நட்சத்திர தினங்களைவிட கூடிய மேன்மை கொண்டதாகக் கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத்திரம் அமைவதால் திருக்கார்த்திகையெனக் குறிப்பிடப்படுகின்றது.

திருக்கார்த்திகை திருநாளை தீபத்திருநாள் என்றும் விளக்கீடு என்றும் கூறுகின்றோம். உலக உய்வின் பொருட்டு முருகப் பெருமான் தோன்றிய தினமாக இந்நாள் கொள்ளப்படுகின்றது. சிவபிரானின் நெற்றிக்கண்ணிலிருந்து வெளிப்பட்ட அக்கினிப் பிழம்புகள் சரவணப்பொய்கையில் சென்று விழுந்தபோது அவை குளிர்ச்சிபெற்று ஆறு குழந்தைகளாகத் தோற்றம் பெற்றதாகவும், அந்த ஆறு குழந்தைகளையும் உமாதேவியார் கட்டியணைத்தபோது ஆறு திருமுகங்களும் பன்னிரு கைகளும் கொண்ட முருகப் பெருமான் தோற்றம் பெற்றதாகவும் புராணங்கள் சொல்கின்றன.

'அருவமுவும் உருவுமாகி, அனாதியாய் பலவாறொன்றாய் பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகி, கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு, ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலக முய்ய, என்ற பாடல் முருகப் பெருமானின் தோற்றத்தை வெளிப்படுத்துகின்றது.

உலக நன்மைக்காக முருகப் பெருமான் தோன்றிய திருநாளாகக் கொள்ளப்படும் இந்நன்னாளை ஆலயங்களிலும் இல்லங்களிலும் தீப ஒளியேற்றிக் கொண்டாடுவது நெடுங்காலமாக இந்துக்கள் கைக்கொள்ளும் வழிபாடாகவும் அமைகின்றது. அத்துடன், ஆசாரத்துடன் விரதமும் இருந்து வழிபாடும் செய்யப்படுகின்றது.

சர்வாலய தீபம், குமாரலயதீபம் என்று இரண்டாக இத்தீபத்திருநாள் வகுக்கப்பட்டுள்ளது. சர்வாலய தீபம் என்னும்போது இந்துக்கள் தமது இல்லங்கள் தோறும் தீப மேற்றுவதாக அமைகின்றது.

சர்வாலய தீபத்தன்று இல்லங்கள் தோறும் விளக்கேற்றி, ஒளி பரப்பி வழிபாடு செய்வதானது ஒவ்வொரு இல்லமும் இறைவன் உறையும் ஆலயமாக விளங்க வேண்டும், ஒவ்வொரு வீடும் புனிதம் நிறைந்த இடமாக இருக்க வேண்டும், தீமை தரும் செயற்பாடுகளோ, சிந்தனைகளோ இன்றி புனிதம் ததும்பும் இல்லங்களாக இறைவன் குடியிருக்கும் கோயிலைப் போன்று சிறப்புடன் விளங்க வேண்டும் என்ற உயரிய தத்துவத்தை உணர்த்துவதாக சர்வாலய தீபம் உள்ளது.

ஆலயங்கள் மட்டுமல்ல ஒவ்வொருவரும் குடியிருக்கும் இல்லங்களும் புனிதமாக இருக்க வேண்டும். அப்போதுதான் பண்புடன் இணைந்த உயர்ந்த வாழ்வை அமைத்துக் கொள்வதுடன், தீய பகை, கொடுமைகளிலிருந்து தற்காத்துக் கொள்ளவும் குடும்ப, சமூக உறவுகளை மேம்படுத்திக் கொள்ளவும் முடியும்.

அத்துடன், பக்தியுடன் கூடிய பண்பு மிகும் நெறியில் வாழ்வின் பாதையை ஒழுங்கமைத்துக் கொள்ளும்போது அஞ்சேல் என்று அபயமளிக்கும் முருகப் பெருமானின் கருணை மிகு காவலும் நிறைந்துவிடும் என்ற நம்பிக்கை ஏற்படுவதால் தன்னம்பிக்கையம் தானே வந்து சேர்ந்து வாழ்வை எழுச்சியுறச் செய்யும்.

இல்லங்களில் தீப ஒளியேற்றுவது போன்று ஆலயங்களிலும் தீபமேற்றி இந்நாளில் வழிபாடு செய்யப்படுகின்றது. ஆலயங்களில் விசேட வழிபாடுகளுடன் தீபமேற்றி வழிபடுவது குமாராலய தீபமெனப்படுகின்றது. முருகன் ஆலயங்களில் மட்டுமல்ல சகல இந்து ஆலயங்களிலும் இத்தீபத் திருநாள் கொண்டாடப்பட்டு வருகின்றது.

கார்த்திகை நட்சத்திரத்திற்கு அடுத்துவரும் ரோகிணி நட்சத்திர தினம் விஷ்ணு ஆலய தீப தினமாகக் கொள்ளப்பட்டுவரும் சம்பிரதாயமுள்ளது. திருக்கார்த்திகை தினத்தன்று தமிழ்நாடு திருவண்ணாமலை திருக்கோயிலும் இத்திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. "யாமிருக்கப் பயமேன் அஞ்சேல்" என்று அபயம் தந்து ஆறுதலளிக்கும் முருகப் பெருமானிடம் துன்ப இருள், யாவும் நீங்கி அருளொளி எங்கும் பரவிப் பிரகாசிக்க அருளுமாறு வேண்டி தீபமேற்றி வழிபடுவோமாக!

- **த.மனோகரன்**

# கூடங்குளம் அணு உலைக்கு எதிராக ஒன்றிணைவோம்

## யாழ்.நகரில் மக்கள் இயக்கம் அறைகூவல்

கூடங்குளம் அணு உலைப் பாடங்களை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க சரியாக புரிந்துகொள்ளவில்லை என்பதால் அதற்கு எதிராக பேதமின்றி ஒன்றிணைவோம் என கூடங்குளத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்ப்பாண விடுதியொன்றில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அந்த இயக்கத்தின் உறுப்பினர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் கூடங்குளம் மக்கள் இயக்கத்தின் பிரதிநிதிகள் மேலும் தெரிவிக்கையில்,

கூடங்குளம் அணு உலை அமைப்பதற்கு இலங்கை, இந்திய அரசாங்கங்கள் செய்து கொண்ட ஒப்பந்தம் குறித்து மக்களுக்கு தெரியப்படுத்த தவறியமைக்கான காரணம் என்ன என்று தெரியப்படுத்துமாறும் பொறுப்பான அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

மக்களின் உரிமை ஜனநாயகப் புதைகுழிக்குள் தள்ளப்பட்டுவிட்டது. இலங்கை அரசியல் இராஜதந்திரத்தின் சவால்களை மக்களுக்கு மறைத்து அரசியல் பேரம் பேசுகின்றார்கள். கூடங்குளம் தொடர்பில் இலங்கை, இந்திய அரசாங்கங்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மக்களுக்கு விபரிக்க வேண்டும்.

கூடங்குளம் அணு உலை குறித்து ஆராயுமாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்கவுக்கு சர்வதேசம், அறிவுறுத்தியது. ஆனால், அவர் அது தொடர்பில் ஆராயாமல் கூடங்குளம் அணு உலையால் ஆபத்து இல்லை எனக் கூறுகின்றார். இதனை மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாது. இதற்கு எதிராக இன, மத பேதம் இன்றி ஒன்று திரண்டு போராட வேண்டும் என்றனர்.

# சண்டிலிப்பாயில் சொந்தக் காணி இல்லாதவர்களின் கவனத்துக்கு

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் சொந்தக் காணி இல்லாதவர்கள் உடனடியாகப் பிரதேச செயலகத்தின் காணிக் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

இதுவரை காலமும் சொந்தக் காணி இல்லாத, செயலக பிரிவுக்குட்பட்ட வறியவர்கள் உடனடியாக பிரதேச செயலக காணிக் கிளையுடன் தொடர்பு கொண்டு அங்கு வழங்கப்படும் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து வழங்குமாறு வேண்டப்படுகின்றனர்.

விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து கிராம அலுவலரின் சிபார்சுடன் மீண்டும் செயலகத்தில் ஒப்படைக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# புலிச்சார்புச் சுவரொட்டிகள் அகற்றப்பட்டன

புலிகளுக்கு ஆதரவாக ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளை பாதுகாப்புப் படையினர் அகற்றியுள்ளனர்.

திருகோணமலை, உப்பு வெளி ஆகிய இரு இடங்களில் இனந்தெரியாதோரால் ஒட்டப்பட்டிருந்த புலிகளுக்கு ஆதரவான சுவரொட்டிகளையே பாதுகாப்புப் படையினர் நேற்றுத் திங்கட்கிழமை காலை அகற்றியுள்ளனர்.

புலிகள் இயக்கத்தின் மாவீரர் தினம் என்று கூறப்படும் தினம் இன்று செவ்வாய்க்கிழமை (27) நினைவுகூரவுள்ளதை முன்னிட்டே இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

# இலவச கல்விச் செயற்றிட்டம்

(சண்டிலிப்பாய்)

சாவல்கட்டு குமுதினி சிறுவர் முன்பள்ளியின் நிர்வாகத்தினரால் இலவச கல்வி செயற்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிர்வாகத்தினர் அப்பகுதியில் உள்ள சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்காகவும் அவர்களின் கல்வி செயற்பாட்டில் ஆர்வத்தினை ஏற்படுத்தும் நோக்குடனும் இவ் செயற் பாட்டினை ஆரம்பித்துள்ளனர்.

எனவே இந்தக் கல்வி விருத்தி செயற்திட்டத்தில் இணைந்து பயில விரும்பும் ஆண்டு 4, 5 மாணவ, மாணவிகள் தமது பெயர் விபரங்களை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

# இலவசமாக தென்னங்கன்றுகள் விநியோகம்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருவதாக தெரிகின்றது. மேற்படி பிரதேச செயலாளர் பிரிவின் வறிய மக்களுக்கெனத் தென்னங்கன்றுகள் கிராம அலுவலர் ரீதியாக வழங்கப்பட்டு வருகின்றது. ஒரு குடும்பத்திற்கு தலா இரண்டு கன்றுகள் வீதம் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டு வருகிறது. தேவைப்படும் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு தென்னங்கன்றுகளை பெற்றுக் கொள்ள முடியும்.

# புதிய மைதானத் திறப்பு விழா

(உடுவில்)

யா/தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் புதிய மைதானத் திறப்பு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அதிபர் என்.சிவநேசன் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் பிரதிநிதி சி.சிவநாதனினால் திறந்து வைக்கப்பட்டது. இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினால் இம்மைதானக் காணி நாற்பது லட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்து பாடசாலைக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீள இணைக்க முயற்சியாம்

## அமைச்சர் விமல் வீரவன்ச கூறுகிறார்

வடக்கு கிழக்கு மாகாணங்களை மீள இணைக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வீட மைப்பு நிர்மாண அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஈழக் கோரிக்கையை நிறைவேற்ற முயற்சிக்கும் தரப்பினர் வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைக்க முயற்சித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் இரத்துச் செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 13ஆம் திருத்தச் சட்டம் இரத்துச் செய்யப்படும் வரை இவ்வாறான சவால்களை முறியடிக்க முடியாது.

திவிநெகும சட்டம் தொடர்பில் உச்ச நீதிமன்றின் தீர்ப்பானது பாராளுமன்றத்தை பலவீனப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. தெரிவித்துள்ளார்.

மாகாணசபை முறைமையினால் பாராளுமன்றின் நடவடிக்கைகளுக்கு பெரிதும் தடைகள் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# மஞ்சள் காமாலை பற்றி தெரிந்து கொள்வோம்

மஞ்சள் காமாலை என்பது ஒரு நோய் அல்ல. அது ஒரு நோய்க் குறி. இரத்தத்தில் பிலிரூபின் என்ற வேதிப்பொருள் அதிகரிப்பதால் ஏற்படும் நிலைதான் மஞ்சள் காமாலை. ஒரு நோய்க்கு பல நோய்க்குறிகள் இருக்கும்.

இரத்ததில் சிவப்பணுக்களும் வெள்ளை அணுக்களும் இருப்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். இதில் சிவப்பணுவினுள் (Red Blood Cells - RBC) உள்ள ஹீமோகுளோபின் (Hemoglobin) என்ற பொருள் தான் பிராண வாயுவை (ஆக்ஸிஜன்) நுரையீரலிலிருந்து உடலின் பிற இடங்களுக்கு கொண்டு செல்கிறது.

சிவப்பணுக்கள் சாகா வரம் பெற்றவை அல்ல. அவை ஒரு குறிப்பிட்ட காலம் பணி செய்த பின் இறந்து விடுகின்றன. அப்படி மரணித்த சிவப்பணுவினுள் உள்ள ஹீமோகுளோபின் சில வேதியியல் மாற்றங்களால் பிலிரூபின் (Bilirubin) என்ற பொருளாகிறது. இதை அன்கான்ஜுகேடட் பிலிரூபின் (Unconjugated Bilirubin) (எதனுடனும் இணைக்கப்படாத பிலிரூபின்) என்று அழைக்கிறார்கள்

இந்த பிலிரூபின் என்பது உடலிருந்து வெளியேற்றப்பட வேண்டிய பொருள். ஆனால் இணைக்கப்படாத பிலிரூபின் என்பது (வாட்டர் இன்சால்யுபிள்) எனவே சிறுநீரகங்களால் இந்த இணைக்கப்படாத பிலிரூபினை அதிக அளவில் வெளியேற்ற முடியாது. (கொஞ்சம் வெளியேறும்) இதற்கு நமது உடலில் ஒரு அருமையான ஏற்பாடு உள்ளது. ஈரலில் இந்த பிலிரூபினானது குளுக்குரோனிக் அமிலத்துடன் சேர்ந்து இணைக்கப்பட்ட பிலிரூபின் ஆகிறது (Conjugated Bilirubin) இந்த இணைக்கப்பட்ட பிலிரூபினனை சிறுநீரகங்கள் முழுமையாக வெளியேற்றி விடும்.

ஆகவே இரத்த அணுக்களில் உள்ள ஹீமோகுளோபினிலிருந்து பிலிரூபின் வருகிறது. இந்த இணைக்கப்படாத பிலிரூபின் இரத்தத்தில் இருக்கிறது. இது மஞ்சள் நிறப்பொருள். இது ஈரலில் இணைக்கப்பட்ட பிலிரூ பின் ஆகிறது.

இந்த இணைக் கப்பட்ட பிலிரூபினானது ஈரலிலிருந்து பித்தநீருடன் சேர்ந்து பித்த நாளங்கள் வழியாக இரைப்பைக்கு வருகிறது. இதில் ஒரு பங்கு சிறுகுடலில் இருந்து இரத்ததிற்கு சென்று சிறுநீரகத்தினால் வெளியேற்றப்படுகிறது. ஒரு பங்கு மலத்துடன் வெளியேற்றப்படுகிறது.

இது தான் நமது உடலில் தினமும், ஏன் ஒவ்வொரு வினாடியும் நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகள்.

**பொதுவாக வரும் மஞ்சள் காமாலை என்ன வகை?**

ஹெபடைடிஸ் A வைரஸ் கிருமியினால் வருவது. நீங்கள் மஞ்சள் காமாலை தடுப்பூசி போட்டாலும் இந்த வகை மஞ்சள் காமாலை தொடர்ந்து வரும்

**அப்படி யென்றால் இந்த தடுப்பூசியினால் என்ன பலன்?**

ஹெபடைடிஸ் A வைரஸ் கிருமியினால் வரும் மஞ்சள் காமாலை என்பது தானாக சரியாகிவிடும். இதனால் உயிருக்கு ஆபத்து கிடையாது. வைத்தியம் தேவையில்லை ஹெபடைடிஸ் B வைரஸ் கிருமியினால் வரும் மஞ்சள் காமாலை என்பது தானாக சரியாகாது. இதனால் உயிருக்கு ஆபத்து உண்டு. கண்டிப்பாக வைத்தியம் தேவை


**வேறு ஏதாவது வித்தியாசம் உள்ளதா?**

ஹெபடைடிஸ் A வைரஸ் கிருமி நீர் மூலம் பரவும் (அதாவது குடிநீர் மூலம்). சுருங்கச்சொன்னால் காலரா எப்படியெல்லாம் பரவுமோ, அப்படியெல்லாம் ஹெபடைடிஸ் B வைரஸ் கிருமி இரத்தம் மூலம் பரவும் (அதாவது இரத்தம் ஏற்றுவது, ஒருவருக்கு போட்ட ஊசியை அடுத்தவருக்கு போடுவது, ஒருவரின் இரத்தம் நமது உடலில் படுவது, பாதுகாப்பற்ற உடலுறவு மூலம்) - சுருங்கச் சொன்னால் எய்ட்ஸ் எப்படி யெல்லாம் பரவுமோ அப்படியெல்லாம்

**ஹெபடைடிஸ் B வைரஸ் கிருமி தடுப்பூசியினால் பாதிப்பு உண்டா?**

மிகவும் குறைவு. அனைத்து தடுப்பூசிகளிலும் இது பாதுகாப்பானது என்று கூறலாம். இந்த மருந்து பெரும்பான்மையான தடுப்பூசிகளைப் போல் கிருமிகளிலிருந்து செய்யப்படுவது அல்ல. அதற்குப் பதில் நவீன முறைகளினால் வேதியியல் பொருட்களிலிருந்து செய்யப்படுவது.

## வழக்கத்திற்கு மாறாக அதிக அளவு ஹீமோகுளோபின் உடைந்தால்




1. அதிக அளவு பிலிரூபின் உருவாகிறது.
2. இதில் ஒரு பகுதி இணைக்கப்பட்ட பிலிரூபினாகிறது
3. மீதி இணைக்கப்படாத பிலிரூபினாக இரத்தத்தில் உள்ளது.
4. இணைக்கப்படாத பிலிரூபின் அதிக அளவில் சிறுநீரில் வெளியேறுகிறது. எனவே சிறுநீர் வழக்கமான நிறத்திலேயே இருக்கும். அதாவது நிறமில்லாமல். இதனால் இந்த வியாதியை நிறமில்லா சிறுநீர் மஞ்சள் காமாலை என்றும் அழைக்கலாம் (acholuric jaundice)

இந்த வியாதியை ப்ரீ ஹெபாடிக் ஜாண்டிஸ் (Pre hepatic Jaundice - அதாவது பிலிருபீன் வழக்கமாக செல்லும் பாதையில் ஈரலுக்கு முன்னர் கோளாறு உள்ளது) என்று அழைப்பார்கள். பொதுவாக இரத்த அணுக்கள் அதிகம் உடைபடும் வியாதிகளில் (ஹீமோலைடிக் டிஸாடர் - hemolytic disorders) இந்த வகை மஞ்சள் காமாலை வரும். இந்த வகை மஞ்சள் காமாலைக்கு வைத்தியம் பார்க்க முதலில் இரத்த சிவப்பணுக்கள் உடைபடுவதை தடுக்க வேண்டும்.

**ஈரல் வேலை செய்யாவிட்டாலோ அல்லது வழகத்திற்கு குறைவாக வேலை செய்தாலோ**

1. வழக்கமான அளவில் உருவாகும் பிலிரூபின் இரத்தத்தில் தேங்குகிறது
2. சிறுநீரில் அதிக அளவு இணைக்கப்படாத பிலிரூபின் வெளியேறுகிறது.

இந்த வகை வியாதிகளை ஹெபாட்டிக் ஜாண்டிஸ் என்று அழைக்கிறார்கள். அதாவது பிரச்சினை ஈரலில் உள்ளது.

# ஆரோக்கிய நாதம்

**கிருமி பாதிப்பு என்றால் ?**

1. பேக்டிரியா 2. வைரஸ் 3. பங்கஸ்
4. பூச்சிகள், புழுக்கள்

இதில் முக்கியமாக வைரஸ் என்று பார்த்தோம் என்றால் அதில்


1. பிற நோய்களை உருவாக்கும் (அதே நேரத்தில் ஈரலிலும் பாதிப்பை ஏற்படுத்தும்) வைரஸ்கள்
2. முக்கியமாக ஈரலை மட்டும் தாக்கும் வைர்ஸ்கள்

இந்த இரண்டாவது முக்கியமாக ஈரலை மட்டும் தாக்கும் வைரஸ்களளில் 7 வகைகள் உள்ளன

1. ஹெபடைட்டிஸ் A
2. ஹெபடைட்டிஸ் B
3. ஹெபடைட்டிஸ் C
4. ஹெபடைட்டிஸ் D
5. ஹெபடைட்டிஸ் E
6. ஹெபடைட்டிஸ் F
7. ஹெபடைட்டிஸ் G

இது போன்ற ஈரல் பாதிப்பினால் வரும் மஞ்சள் காமாலை நோய்கள் பெரும்பாலும் ஹெபடைட்டிஸ் A வைரஸ் கிருமியினாலேயே வருகின்றன. எனவே இது தானாகவே சரியாகிவிடும். கொஞ்ச நாட்களுக்கு எண்ணை மற்றும் கொழுப்பு சத்து அதிகம் இல்லாத உணவை சாப்பிட்டால் போதும்.

## ஈரலில் என்ன பிரச்சனை என்றால்




1. வேதியியல் பொருட்களால் இருக்கலாம்.
2. சில வகை மருந்துப் பொருட்களால் இருக்கலாம்.. முக்கியமாக - பக்க விளைவுகள் இல்லை என்று பொய் சொல்லி (அல்லது அறியாமல் சொல்லி) விற்கப்படும். சித்த, ஆயுர்வேத, யூனானி, ஹோமியோமதி மருந்துக்களில் பல ஈரலையும் சிறுநீரகத்தையும் நாசம் செய்ய வல்லவை. பக்க விளைவு இல்லாத மருந்து எதுவும் கிடையாது.

கீழா நெல்லி என்பது இந்த நோய்க்கு (வைரஸ்) மருந்து அல்ல.
அது ஈரல் விரைவில் குணமடைய வைப்பதாக நம்பம்படுகிறது
கீழா நெல்லி குறித்து பல ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு
அவை உடலுக்கு தீங்கு விளைவிப்பதில்லை
என்று கண்டுபிடித்து உள்ளார்கள்.

## இப்பொழுது உங்களுக்கு புரிந்திருக்க வேண்டிய விஷயம்

1. மஞ்சள் காமாலை பல காரணங்களினால் வரும்
2. இந்த காரணங்கள் குறித்து (ஹீமோலைடிக் டிஸாடர், டுபின் ஜான்ஸன் சிண்ட்ர்ரோம், பித்த நீர் பாதை அடைப்பு)
3. எனவே உங்களுக்கோ அல்லது நண்பர்கள் யாருக்காவது மஞ்சள் காமாலை என்றால் முதலில் ஒரு நல்ல மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்து, இரத்த பரிசோதனை செய்து அது ஹெபாடிக் ஜாண்டிஸ் தானா என்று உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். வெறும் கீழா நெல்லி மற்றும் பத்தியம் இருந்தால் உயிருக்கு ஆபத்து.

## ஈரலிலிருந்து இரைப்பைக்கு பித்தம் வரும் வழியில் எதேனும் அடைப்பு இருக்கிறது என்றால் என்ன நடக்கும்

1. வழக்கமான அளவில் உருவாகும் பிலிரூபின் வழக்கமாக செயல்படும் ஈரலினால் இணைக்கப்பட்ட பிலிரூபினாக மாற்றப்படுகிறது
2. பித்த நீர் வழியாக வெளியேற முடியாத இணைக்கப்பட்ட பிலிரூபின் மீண்டும் இரத்தத்தில் சேர்க்கிறது
3. இரத்தத்தில் அளவிற்கு அதிகமான இணைக்கப்பட்ட பிலிரூபின் உள்ளது
4. சிறுநீரில் அதிக அளவு இணைக்கப்பட்ட பிலிரூபின் வெளியேறுகிறது. சிறுநீர் மஞ்சள் நிறமாக மாறுகிறது.
5. இரைப்பைக்கு பித்த நீர் வராததால், கொழுப்பு சத்து ஜீரணிக்கப்படுவதில்லை.
6. எனவே மலத்தில் கொழுப்பு சத்து வெளியெறுகிறது
7. மலம் வெள்ளை நிறமாக உள்ளது.


இது போன்ற நிலைமைகளை போஸ்ட் ஹெபாடிக் ஜான்டிஸ் என்று அழைக்கிறார்கள். அதாவது ஈரலிலிருந்து பிலிரூபின் வெளியேறியபின் பிரச்சினை. அதுவும் பெரும்பாலும் எதேனும் அடைப்பு. இந்த அடைப்பு., ஈரலுக்கு உள்ளும் இருக்கலாம் - இண்ட்ரா ஹெபாடிக், ஈரலுக்கு வெளியிலும் இருக்கலாம் - எக்ஸ்ட்ரா ஹெபாடிக் அதே போல் இது (இந்த அடைப்பு ) பிறக்கும் போதே இருக்கலாம் - கன்ஜெனிடல் பிறகு வந்திருக்கலாம் - அக்கொயர்ட்.

இதில் 20 வயதிற்கு மேல் திடீரென்று ஒருவருக்கு மஞ்சள் காமாலை வந்து மலம் வெள்ளை நிறமாக அதிக கொழுப்புடன் வருகிறது என்றால் அதற்கு காரணம் எதோ அடைப்பு. அது பித்த கற்களாகவும் (பைல் ஸ்டோன் ) இருக்கலாம் அல்லது புற்று நோயாகவும் (கான்ஸர்) இருக்கலாம்.

முக்கியமான விஷயம், இது போன்ற நோய்களினால் வரும் மஞ்சள் காமாலை கீழா நெல்லி சாப்பிட்டாலோ அல்லது என்ன மருந்து சாப்பிட்டாலும் சரியாகாது. இதற்கு கண்டிப்பாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் அதுவும் புற்று நோய் என்றால் ஆரம்ப கட்டத்திலேயே அறுவை சிகிச்சை செய்தால் தான் பிழைக்க முடியும்.

**மஞ்சள் காமாலை தடுப்பூசி என்று அனைவரும் போடுகிறார்களே. அது என்ன?**

மஞ்சள் காமாலை தடுப்பூசி என்பது ஹெபடைடிஸ் B வைரஸ் கிருமிக்கு மட்டும் எதிரானது தான். இந்த தடுப்பூசி போட்டால் ஹெபடைடிஸ் B வைரஸ் கிருமி மற்றும் ஹெபடைடிஸ் D வைரஸ் கிருமியினால் ஏற்படும் மஞ்சள் காமாலை நோய்கள் மட்டுமே வராது. **பிற வைரஸ் கிருமிகள், அனைத்து பேக்டிரியா கிருமிகள், அனைத்து பங்கஸ் கிருமிகள் அனைத்து பூச்சிவகைகள், அனைத்து புழுக்கள், அனைத்து ப்ரீ ஹெபாடிக் வகைகள், அனைத்து போஸ்ட் ஹெபாடிக் வகைகள்** மூலம் வரும் அனைத்து மஞ்சள் காமாலைகளும் வரும்.




**நெப்போலியன்** பண்ணை வீட்டுத் தோட்டத்திலே வாயில் ஒரு சுருட்டைக் கவ்விப் புகைவிட்டுக் கொண்டு, குறுக்கும் நெடுக்கும் நடந்ததைப் பார்த்த மிருகங்கள், அதை அதிசயம் என்று கருத வில்லை. ஜோன்ஸ் வைத்துவிட்டுப்போன துணிகளையும் எடுத்து அணிந்துகொண்டு காட்சியளிக்கத் தொடங்கின பன்றிகள். கறுப்புக் கோட்டு, சிவந்த நிறமுள்ள கால் சட்டை பெல்ட் இவற்றுடன் நெப்போலியன் தோன்றியபோதும் மிருகங்கள் எதுவும் சொல்லவில்லை. நெப்போலியனுக்கு மிகவும் வேண்டிய பெண் பன்றி ஒன்று ஜோன்ஸின் மனைவி அணிந்த பூப் போட்ட கௌனை உடுத்திக் கொண்டு நெப்போலியனுடன் தோட்டத்தில் உலாவியதைக் கண்ட மிருகங்கள் பேசாமல் இருந்தன.

ஒருவாரம் கழித்து மாலை நேரத்தில், விலங்குப் பண்ணைக்கும் பல விருந்தாளிகள் வந்தனர். ஆம் ரேக்ளா வண்டிகளில் பல மனிதர்கள் வந்தார்கள். இந்தப் பண்ணை எப்படி நிர்வகிக்கப்படுகிறது என்று பார்ப்பதற்காக பக்கத்துப் பண்ணைகளிலிருந்தெல்லாம் மனிதர்கள் வந்தார்கள். பண்ணை முழுவதும் வந்தவர்களுக்குக் காட்டப்பட்டது. எல்லாவற் றையும் அவர்கள் ரொம்பப் பாராட் டினார்கள். காற்றாடியைப் பற்றி விசேமாக சிலாகித்துக்கொண்டார் கள்.

அந்தச் சமயம் மிருகங்களெல்லாம் கோதுமை வயலில் களை பிடுங்கிக்கொண்டிருந்தன. சுறுசுறுப்பாக அவை வேலை செய்தன. நிமிர்ந்தோ, திரும்பியோ பாராமல் தலைகுனிந்தபடி வேலையில் ஈடுபட்டிருந்தன.


பன்றிகளைப் பற்றி பயப்படுவதா, அல்லது வந்திருந்த மனிதர்களைப் பற்றி பயப்படுவதா என்று அவற்றிற்குத் தெரியவில்லை.

இருட்டியபின் பண்ணை வீட்டிலிருந்து எழுந்த சிரிப்பும், பாட்டும் கூத்தும் கேளிக்கையும் மற்ற மிருகங்களின் காதுகளை எட்டின. மனிதக் குரலும் பன்றிகளுடைய குரலும் கலந்து கேட்கவே, அங்கு என்னதான் நடக்கிறது என்று பார்க்க வேண்டும் என்கிற ஆவல் விலங்குகளுக்கு மிகுந்தது. மிருகங்களும் மனிதர்களும் சரிசமமாகப் பழக ஆரம்பித்திருக்கிறார்களே, என்ன நிகழும் அங்கே? ஒன்றாக சந்தடி செய்யாமல் அவை பண்ணை வீட்டுத் தோட்டத்திற்குள் புகுந்து மெதுவாகச் சென்றன. கதவண்டை நின்று அவை கொஞ்சம் தயங்கின.

பயமாகத்தான் இருந்தது. எனினும் க்ளோவர் முன்னால் செல்லவே மற்ற மிருகங்களும் பின் தொடர்ந்தன. வீடுவரை போய் ஜன்னல் வழியாக உள்ளே பார்த்தன. அங்கே, பெரிய நீண்ட மேஜையைச் சுற்றி ஆறேழு குடியானவர்களும், உயர்ந்த பதவி வகித்த ஆறேழு பன்றிகளும் உட்கார்ந்திருந்தன. நெப்போலியன் மேஜையின் தலைப்பக்கம் உட்கார்ந்து தலைமை வகித்தது. நாற்காலிகளில் உட்கார்ந்திருந்த பன்றிகள், பழகியவைபோல சௌ-கரியமாகத்தான் உட்காரந்திருந்தன. எல்லோருமாகச் சீட்டாடிக் கொண்டிருந்தார்கள். இப்போது ஆட்டத்தை நிறுத்திவிட்டு, ஒரு தரம் குடிப்பதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். மனிதர்கள் பன்றிகளுடன் சேர்ந்து 'டோஸ்ட்' குடிக்கத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். ஒரு பெரிய பீர் ஜாடி கைக்குக் கை மாறியது. ஒவ்வொருவர் முன்னாலேயுமிருந்த கிண்ணங்களில் பீர் நிரம்பி இருந்தன. ஜன்னலில் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டு நின்ற மிருகங்களை பன்றிகளோ குடியானவர்களோ கவனிக்கவில்லை. **(நாளை)**

# போராட்டம் !!!

**வா**ழ்க்கையில் நாம் எப்படிச் சோதனைகளை எதிர்கொள்கிறோம் என்பதைப் பொறுத்து அவை தோல்வியாகவோ அல்லது வெற்றியாகவோ அமையலாம். ஆனால் முயற்சி இல்லாமல் வெற்றி வருவதில்லை.




ஒரு உயிரியல் ஆசிரியர் தனது மாணவர்களுக்கு ஒரு கம்பளிப் புழு எப்படி வண்ணத்துப் பூச்சியாக மாறுகிறது என்று சொல்லிக் கொண்டு இருந்தார். அவர் தனது மாணவர்களிடம் ஒரு வண்ணத்துப் பூச்சி கூட்டினைக் காட்டி அடுத்த ஒரு சில மணி நேரங்களில் வண்ணத்துப் பூச்சி தனது கூட்டிலிருந்து போராடி வெளிவரப்போகிறது என்றும் ஆனால் யாரும் அதற்கு உதவக்கூடாது என்றும் கூறிவிட்டு வெளியே சென்று விட்டார்.

மாணவர்களில் ஒருவன் அதன் மேல் இரக்கப்பட்டான். தனது ஆசிரியரின் சொல்லை மீறி, அந்த வண்ணத்துப் பூச்சி தனது கூட்டிலிருந்து வெளிவர உதவுவதற்குத் தீர்மானித்தான். அந்த வண்ணத்துப் பூச்சி போராட தேவையின்றி எளிதாக வெளியே வரும் பொருட்டு அந்தக் கூட்டை உடைத்தான். ஆனால் சிறிது நேரத்திற்கு பிறகு வண்ணத்துப் பூச்சியும் இறந்து விட்டது.


இப்பொழுது அந்த மாணவன் வண்ணத்துப் பூச்சியின் இறப்பிற்கு காரணமாகி விட்டான். கூட்டிலிருந்து வெளிவரப் போராடும் போராட்டம் உண்மையில் அதனுடைய சிறகுகளை வளர்க்கவும், தன்னை பலப்படுத்திக் கொள்ளவும் உதவும் என்பது தான் இயற்கையின் சட்டம். மாணவன் அந்த வண்ணத்துப் பூச்சியைப் போராட்டத்தில் இருந்து காப்பாற்றி விட்டதால், அது இறந்து விட்டது. இதே கொள்கையை நமது வாழ்விற்கும் பயன்படுத்துங்கள். போராட்டங்கள் இல்லாமல் வாழ்வில் எதுவுமே பயன்தராது.

வர்ணம் தீட்டுங்கள்





# சிறுவர் அமுதம்


## டைட்டனிக் கப்பல் விபத்து



**டை**ட்டனிக் திரைப்படம் மூலமாக உலகப் பிரசித்தி பெற்ற இந்தக் கப்பல் விபத்து 1912ஆம் ஆண்டு இடம்பெறறது. கட்டி முடித்த போது உலகின் மிகப் பிரமாண்டமான சொகுசுக் கப்பலாகக் கருதப்பட்ட டைடானிக் தனது வெள்ளோட்டத்திலேயே பனிப் பாறையுடன் மோதுண்டு கடலுள் சங்கமமானது. 1500 பயணிகளையும் பலியெடுத்த டைடானிக் கட்டி முடிக்க ஏற்பட்ட மொத்த செலவு 7 மில்லியன் அமெரிக்க டொலர்கள். இப்போதைய மதிப்பில் சுமார் 150 மில்லியன் டொலர்கள்.



## ஒற்றுமை



சின்ன சின்ன
மீன்கள் ஒன்றாய்ச்
சேர்ந்து வாழும் தொட்டியாம்!
வண்ண வண்ண
மீன்கள் அன்பாய்
வாழு கின்ற தொட்டியாம்!

அண்ணன் தம்பி
சண்டை யில்லை
அனுச ரித்து வாழுமாம்!
சின்ன மீனைப் பெரிய மீன்கள்
சிறிதும் ஏய்ப்ப தில்லையாம்!

பருக்கை கொஞ்சம்
போடும் போது
பங்கு போட்டுத் தின்னுமாம்!
நெருக்க மான உறவு கொண்டு
நேர்த்தி யாக கூடுமாம்!

கண்மாய், குளத்தைப் பார்க்கும்
போது
கடுகு போலத் தொட்டியாம்!
வண்ண மீண்கள் அதிலும் கூட
வம்பில் லாமல் வாழுமாம்!

சுடோக்கு எண்: 99 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 5 | 4 | 2 | 9 | 1 | 8 | 7 |
| 8 | 4 | 9 | 7 | 1 | 5 | 6 | 2 | 3 |
| 2 | 7 | 1 | 8 | 3 | 6 | 5 | 4 | 9 |
| 5 | 6 | 2 | 3 | 9 | 7 | 8 | 1 | 4 |
| 7 | 8 | 4 | 1 | 6 | 2 | 3 | 9 | 5 |
| 1 | 9 | 3 | 5 | 8 | 4 | 2 | 7 | 6 |
| 4 | 2 | 6 | 9 | 5 | 1 | 7 | 3 | 8 |
| 9 | 1 | 8 | 6 | 7 | 3 | 4 | 5 | 2 |
| 3 | 5 | 7 | 2 | 4 | 8 | 9 | 6 | 1 |

சுடோக்கு எண்: 100


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | | 3 | |
| | | 8 | 9 | | 3 | | 2 | 5 |
| | 3 | | 6 | | | 4 | | 9 |
| 1 | | 6 | | | | 2 | 5 | |
| 8 | | | | | | | | 6 |
| | 5 | 2 | | | | 9 | | 3 |
| 3 | | 9 | | | 7 | | 4 | |
| 5 | 6 | | 1 | | 8 | 3 | | |
| | 8 | | 3 | | | | | |

# "மணியம் தோழர்"

# நிறைவுகளும், நினைவுகளும் . . .



கே.ஏ.சுப்பிரமணியம்



சங்கானை, நிற்சாமத்தில் எரித்துச் சாம்பராக்கப்பட்ட வீடொன்றினை முன்னாள் எம்.பி. எஸ்.டி.பண்டார நாயக்காவும் கே.ஏ.சுப்பிரமணியமும் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசத் தலைவர் களில் ஒருவராக விளங்கிய தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் அவர்களின் 23வது நினைவு தினம் இன்றாகும். இளம் வயதிலேயே காங்கேசந்துறை சீமேந்து தொழிற்சாலையில் பொறியியல் பிரிவில் கடமை யாற்றி, தொழிற்சங்க நடவடிக்கைகளில் மிகத் தீவிரமாக ஈடுபட்ட சமயம், கொம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்கத் தலைவர்களோடு ஏற்பட்ட தொடர்பின் காரணமாக, கொம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து, முழு நேர ஊழியராக இறுதிவரை அர்ப்பணிப்பு உணர்வோடு செயலாற்றியவர்.

கொம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றில் பெரும் திருப்பு முனையாக அமைந்த 10.03.1963ல் பழைய யாழ்.நகர மண்டபத்தில் நடைபெற்ற பிரசித்திபெற்ற வாலிபர் மாநாட்டின் வெற்றிக்காக மிகக் கடுமையாக உழைத்தார். வட பகுதியின் குக்கிராமங்கள் தோறும் வாலிபர் சங்கக் கிளைகளை அமைத்து, அக்கிராமங்களின் சார்பில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் அம்மாநாட்டில் கலந்து கொள்வதற்கு வழிவகுத்தவர் என்பதோடு, அந்த மாநாட்டில் பங்கேற்ற வாலிபர்கள் பலர் பின்னாளில் பொறுப்புமிக்க கொம்யூனிஸ்ட்டுகளாக பரிணமிக்க ஏற்ற வழிகாட்டல் களை வழங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

10.03.1963ல் நடைபெற்ற அந்த வாலிபர் சங்க மாநாட்டில் கொம்யூனிஸ்ட் கட்சியின் முக் கிய தலைவர்களாக விளங்கிய தோழர்கள் பீட்டர்கெனமன், என்.சண்முகதாசன், சரத் முத்தெட்டுவேகம, வி.பொன்னம் பலம், மு.கார்த்திகேசன், டபிள்யூ. ஏ.தர்மதாச உட்பட பல்வேறு தலைவர்கள் கலந்துகொண்டார் கள். அந்த மாநாட்டில் தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் வாலிபர் அமைப்பின் வடபிரதேச செயலாளராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

யாழ்.வாலிபர் மாநாட்டின் பின்னர் கட்சி இரண்டாகப் பிளவுபட்டது. என்.சண்முகதாசன் தலைமையிலான புரட்சிகர அணியைப் பலப்படுத்துவதில் மணியம் தீவிரமாக ஈடுபட்டார். கொம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட பிளவின் பின்னர், இளைஞர்கள் மத்தியில் மார்க்சியக் கருத்துக்கள் தீவிரமாக உள்வாங்கப்பட்டதன் காரணமாக ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டங்கள் வலுப்பெற்றதோடு, வடபிரதேசத்திலும் சமத்துவ சமுதாய அமைப்பை ஏற்படுத்து வதற்கான போராட்டங்கள் சிறிது சிறிதாக முளைவிடத் தொடங்கின.

இக்காலப் பகுதியில் தீண்டாமைக்கு எதிராகவும், ஆலயங்கள், தேனீர்க்கடைகள் ஆகியவற்றில் சமத்துவம் கோரியும் ஒடுக்கப்பட்ட மக்க ளின் போராட்டங்கள் ஆங்காங்கே வெடித்தெழுந்தன. சாதி ஒடுக்கு முறைக்கு எதிராக அறைகூவல் விடுத்த கொம்யூனிஸ்ட் கட்சி, ஒடுக்கப்பட்ட மக்களையும் முற் போக்கு சக்திகளையும் ஒருங்கி ணைத்து தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தைக் கட்டி யெழுப்பியது. இந்த இயக்கத் தில் ஒடுக்கப்பட்ட மக்கள் மட்டுமல்லாது, முற்போக்காளர்களான பல்வேறு சாதிப்பிரிவினர், எழுத்தா ளர்கள் எனப் பலதரப்பட்டோர் இணைந்துள்ளனர். இதன்மூலம் மக்கள் மத்தியில் சாதியமைப் புக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் கூட்டங்கள் கிராமம் கிராமமாக நடைபெற்றது. அக்கூட்டங்களில் கட்சியின் வடபிரதேச செயலாளராக விளங்கிய தோழர் வி.ஏ.கந்த சாமி உட்பட, மணியம், டானியல், நீர்வைப் பொன்னையன் போன்ற வர்கள் உரையாற்றியதோடு, கிராம மக்களை வெகுஜன அமைப்போடு ஒருங்கிணைப்பதி லும் அயராது பாடுபட்டனர்.

இத்தகைய ஒரு எழுச்சி மிக்க சூழ் நிலையில் 1966ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ம் திகதி " சாதியமைப்புத் தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்" என்ற கோ'த்துடன் சுன்னாகத்திலிருந்து, யாழ்ப்பாணம் நோக்கிய பிரமாண்டமான ஊர்வலம் நடைபெற்றது. இந்த ஊர்வலத்தைத் தலைமை தாங்கி வழி நடத்திச் சென்ற தோழர்கள் வீ-ஏ-கந்தசாமி, கே-ஏ-சுப்பிரமணியம் ஆகியோர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப் பட்ட போதிலும் ஊர்வலம் யாழ்-முற்றவெளியைச் சென்றடைந்தது.

1966 அக்டோபர் எழுச்சியைத் தொடர்ந்து சாவகச்சேரி, சங்கானை, அச்சுவேலி, நெல்லியடி போன்ற இடங்களில் தேனீர்க்கடைகளில் சமத்துவம் கோரிப்போராட்டங்களில் ஈடுபட்ட வெகுஜன அமைப்பைச் சேர்ந்தவர்கள் பொய்க்குற்றச் சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டுச் சிறைச்சாலையில் விளக்கமறியல் கைதிகளாக வைக்கப்பட்டிருந்தனர். பலர் வெளியே வரமுடியாதவாறு கடுமையான சட்டப்பிரிவுகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், அவர்களின் இக்கட்டான நிலைமையை தென்னிலங்கை மக்களுக்கும் தெரியப்படுத்தும் பொருட்டு கம்யூனிஸ்ட் கட்சியோடும், ஏனைய முற்போக்கு இயக்கங்க ளோடும் சம்பந்தப்பட்ட பல முக்கியஸ்தர்கள் யாழ்ப்பாணத் திற்கு வருகை தந்தனர். அவர்க ளில் முக்கிய மானவர் கம்பஹா தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்-டி-பண்டார நாயக்கா அவர்களா வார். இவரை, வடபகுதிப் போராட்டத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கும், ஒடுக்கப்பட்ட மக்கள் ஆலயப்பிரவேசம் செய்வார்கள் என்ற அச்சத்தால் பூட்டப்பட்டிருந்த ஆலயங்கள், கோவிற்கேணிகள், கிணறுகளில் அந்த மக்கள் தண்ணீர் எடுப்பதைத் தடுக்கும் விதத்தில் அவற்றைச் சுற்றி முட்கம்பி வேலிகள் அமைக்கப் பட்டிருந்ததையும் தோழர்- கே-ஏ-சுப்பிரமணியம் நேரடியாகக் காண்பித்தார். அத்தோடு, யாழ்-சிறையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களையும் சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளையும் தோழர்-சுப்பிரமணியம் செய்திருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

1969ம் ஆண்டு மே தினமும், போயா தினமும் ஒரே நாளில் வந்தமையால், மே தினத்தை மே முதலாம் திகதி கொண்டாடுவதை அப்போதைய அரசாங்கம் தடைசெய்தது. இந்த நிலையில் கம்யூனிஸ்ட் கட்சி "மே தினத்தை மேதினத்தன்று கொண்டாட உறுதி பூண்டதுடன் அரசு எத்தகைய அடக்கு முறையை ஏவி விட்டாலும், அதற்கெதிராகப் போராடித் தொழிலாள வர்க்கத்தின் உரிமையை நிலை நாட்டத் தீர்மானித்தது. அதற்கான அறைகூவலையும் விடுத்தது. கட்சியின் அறைகூவலுக்கு இணங்க தொழிலாளி வர்க்கமும் மே தினத்தை மேதினத்தன்றே யாழ்-நகரில் நடாத்தியது.

மேதின ஊர்வலத்திற்கு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தோழர்-கே-ஏ-சுப்பிரமணியம் தலைமை தாங்கிச்சென்றார். ஊர்வலம் யாழ்-கே-கே-எஸ்-வீதியில் சென்று கொண்டிருந்தபோது,பெருமளவு போலீசார் குவிந்து நின்று தோழர்-மணியத்தை இலக்கு வைத்துத் தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதலில் அவரது கை விரல்கள் அடித்து நொருக்கப்பட்டன.தோள்பட்டை எலும்பு,கால்களின் எலும்புகள் ஆகியவற்றில் உடைவுகள் ஏற்பட்டன.

சங்கானை, அச்சுவேலி, மந்துவில், மட்டுவில் போன்ற பகுதிகளில் இடம்பெற்ற போராட்டங்களில் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களின் வாயிலாக சிறைச்சாலைத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களுக்காக நீதிமன்றங்களில் ஆஜராவதற்கு யாழ். சட்டத்தரணிகள் மறுப்புத்தெரிவித்து, சாதியமைப்பின்மீது தமது விசுவாசத்தை வெளிப்படுத்திய வேளை, கட்சியின் தீர்மானத்துக்கு இணங்க, தென்னிலங்கையிலிருந்து பல சிறந்த வழக்கறிஞர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்து அந்த வழக்குகளிலிருந்து ஒடுக்கப்பட்ட மக்களை விடுவிப்பதில் மணியம் முக்கிய பங்குவகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1966 ஒக்டோபர் எழுச்சியோடு ஆரம்பமான ஒடுக்கப்பட்ட மக்களின் ஆயுதம் தாங்கிய போராட்டம் 1969 இன் இறுதிப்பகுதிவரை நீடித்தது. இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் உட்படப் பல ஆலயங்களும், வட பகுதியிலுள்ள சகல தேனீர்க்கடைகளும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக திறந்துவிடப்பட்டு, சமத்துவம் பேணப்பட்டது.

ஒடுக்கப்பட்ட மக்கள் எழுச்சிபெற்று போராடிய காலத்தில் அந்த மக்களுக்கு சரியான திசை வழியைக் காட்டி, போராட்டத்தை நெறிப்படுத்திய கொம்யூனிஸ்ட் கட்சியும், தோழர் கே,ஏ.சுப்பிரமணியமும் என்றென்றும் ஒடுக்கப்பட்ட மக்களால் நினைவுகூரப்படுவார். ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக தோழர் சண்முகதாசன் தலைமையிலான கொம்யூனிஸ்ட் கட்சி முன்னெடுத்த ஆயுதப்போராட்டமே இலங்கையில் நடைபெற்ற முதலாவது ஆயுதம் தாங்கிய போராட்டமாகும். நிலப்பிரபுத்துவ சாதியக் கருத்தியலைத் தொடர்ந்து முதலாளித்துவ அமைப்பிலும் நீடிக்க ஆதிக்க சக்திகள் மேற்கொண்ட அடக்குமுறையையும், அச்சுறுத்தலையும் நேரடியாக எதிர்கொண்டு ஒடுக்கப்பட்ட மக்கள் வெற்றிபெற்ற வரலாற்றில் மணியத்திற்கு மிகுந்த முக்கிய பங்குண்டு.

மிகக் குரூரமாக சகல வழிகளிலும் தாக்கப்பட்ட சங்கானை- நிச்சாமம் மக்களுடன் மக்களாக நின்ற மணியம் அம்மக்களின் வீரத்தையும், போராட்டத்தில் அவர்கள் காட்டிய உறுதிப்பாட்டையும் உலகறிய ஓங்கியொலிக்கச் செய்தார். தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த (சங்கானையை உட்படுத்தியிருந்த) வட்டுக்கோட்டைத் தொகுதிப் பா.உ. அ.அமிர்தலிங்கம் ஒரு தடவை பாராளுமன்றத்தில் "சங்கானை தற்போது ஷங்காயாக மாறிவிட்டது" என்று கூறுமளவுக்கு சங்கானை-நிச்சாமம் மக்களின் போரட்டம் வலுப்பெற்றிருந்தது.

மணியம் தோழர் தனது கலப்புத் திருமணத்தில் தாலியாக அரிவாளையும் சம்மட்டியையுமே "தாலியாக" மனைவிக்குக் கட்டினார். அது தொட்டு, பாசிச சக்திகளின் அச்சுறுத்தல்வரை எக்காலத்திலும் தான் ஏற்றுக்கொண்ட கொள்கையில் சமரசம் செய்துகொள்ளாது, கொள்கைப்பிடிப்புடன் வறுமையையும் வெற்றிகொண்டு, சொல்லாலும் செயலாலும் வாழ்ந்துகாட்டிய ஒரு இலட்சிய புருஷர் என்றால் மிகையாகாது.

- கே.சுப்பையா

# உலக பார்வை

# என் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய்: சர்கோசி

பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலின் போது மூதாட்டியிடம் ரூ.28 கோடி நிதி வசூல் செய்ததாக முன்னாள் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசி மீது குற்றம் சுமத்தப்பட்டது.



பிரான்சின் ஜனாதிபதியாக இருந்தவர் நிக்கோலஸ் சர்கோசி. இவர் கடந்த 2007ஆம் ஆண்டு நடந்த தேர்தலில், பிரசாரத்தின் போது சட்டவிரோதமாக தேர்தல் நிதி வசூலித்தார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது.

பிரான்சின் எல் ஓரியல் காஸ் மடிக்ஸ் நிறுவன தொழிலதிபர் லில்லியன் பெட்டன்கோர்ட் என்ற 90 வயது மூதாட்டியிடம், 'ரூ.28 கோடி தேர்தல் நிதி வசூலித்ததாகவும், லில்லியனின் சுவிஸ் வங்கி கணக்கில் இருந்து இந்த பணம் பரிமாற்றம் செய்யப்பட்டதும் கண்டுபிடிக்கப்பட்டது.

இதுதொடர்பாக சர்கோசி மீது வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு விசாரணை பிரான்சின் தென்மேற்கு பகுதியில் உள்ள போர்டியக்ஸ் நகர் நீதிமன்றத்தில் நடந்தது.


அப்போது நேரில் ஆஜரான சர்கோசி, நான் எந்த தவறும் செய்யவில்லை. சந்தேகத்தின் அடிப்படையில் என்னிடம் விசாரணை நடத்துவது என் வருங்கால அரசியல் வாழ்க்கையை பாதிக்கும் என்றார்.

மேலும் கூறுகையில், லில்லியன் பெட்டன்கோர்ட் என்பவரை எனக்கு 28 வருடங்களாக தெரியும். அவரிடம் இருந்து இதுவரையிலும் நான் எந்த தொகையும் பெற்றதும் இல்லை, கொடுத்ததும் இல்லை என்று தெரிவித்தார்.

இக்குற்றச்சாட்டுகள் அனைத்தும் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு எதிராக திரும்பும் என்றும் நம்பப்படுகிறது.

# சீனாவில் உலகின் மிக உயரமான கட்டிடம்

உலகிலேயே மிக உயரமான 220 அடுக்கு மாடிகள் கொண்ட கட்டிடம் சீனாவில் கட்டப்பட உள்ளது.



தற்போது துபாயில் உலகின் மிக உயரமான புர்ஜ் கலீபா என்ற 160 அடுக்குமாடி கட்டிடம் உள்ளது.

இந்த கட்டிடத்தை கட்டிய பிராட் நிறுவனம், தற்போது சீனாவின் சாஙஷா நகரில் 220 அடுக்குமாடி கட்டிடத்தை வரும் ஜனவரி மாதம் முதல் கட்ட உள்ளது.


மூன்று மாதங்களில் கட்டுமான பணிகளை முடிக்கவும், ஒரு நாளைக்கு ஐந்து தளங்களை கட்டி முடிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் அரை மைல் தூர உயரம் கொண்ட இந்த கட்டிடம் கடுமையான நிலநடுக்கத்தை தாங்கும் என கட்டுமான நிறுவனத்தினர் உறுதியளித்து உள்ளனர்.

இந்த ஆண்டின் இறுதிக்குள் சீன அரசு இதற்கு ஒப்புதல் அளித்து விடும் என்றும், கட்டுமான பணியில் 3000க்கும் அதிகமான ஊழியர்கள் ஈடுபடுவர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# பாலியல் குற்றச்சாட்டில் சிக்கிய பெர்லுஸ்கோனி மீண்டும் தேர்தலில் போட்டியிட முடிவு

ஊழல் மற்றும் பாலியல் குற்றச்சாட்டில் சிக்கி பதவியிழந்த இத்தாலியின் முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி அடுத்த தேர்தலில் மீண்டும் போட்டியிட போவதாக அறிவித்துள்ளார்.



இத்தாலியில் நீண்ட ஆண்டுகள் பிரதமராக பதவி வகித்தார் சில்வியோ பெர்லுஸ்கோனி. 3 முறை பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அரசியலில் மட்டுமன்றி மீடியா செட் என்ற நிறுவனத்தையும் நடத்தி வருகிறார்.

எனினும் மாபியாக்களுடன் தொடர்பு, ஊழல், அதிகார துஷ்பிரயோகம், வரி ஏய்ப்பு போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகள் இவர் மீது சுமத்தப்பட்டன.

மேலும் கடந்தாண்டு பிப்ரவரி மாதம் 18 வயதுக்குட்பட்ட கரீமா என்ற சிறுமியுடன் தவறான உறவு வைத்துக் கொண்டதாகவும், அதற்காக அவர் ஏராளமான பணம் செலவிட்டதாகவும் பரபரப்பாக புகார் எழுந்தது.

இதனை தொடர்ந்து இத்தாலியில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதால், பதவி விலகினார்.

வரி ஏய்ப்பு வழக்கில் கடந்த அக்டோபர் மாதம் 26ஆம் திகதி பெர்லுஸ்கோனிக்கு நீதிமன்றம் 4 ஆண்டு சிறை தண்டனை விதித்தது. எனினும் சட்ட விதிமுறைகளின்படி இவருக்கு வழங்கப்பட்ட தண்டனை ஓராண்டாக குறைக்கப்பட்டது.

இதை எதிர்த்து பெர்லுஸ்கோனி மேல்முறையீடு செய்ய உள்ளார். பல்வேறு குற்றச்சாட்டுகளில் சிக்கியுள்ள பெர்லுஸ்கோனி அரசியலுக்கு மீண்டும் வரமாட்டார் என்று எதிர்பார்க்கப்பட்டது.


ஆனால் அடுத்த தேர்தலில் மீண்டும் போட்டியிடுவேன் என்று அறிவித்துள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.



இங்கிலாந்தின் கார்டிப் நகரில் வேல்ஸ் மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ரக்பி போட்டியை காண பங்கேற்க வந்த பிரிட்டன் இளவரசர் வில்லியம்மின் மனைவி கேத்தேவுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

# விமானம் தாங்கி கப்பலில் போர் விமானத்தை தரையிறக்கி சீனா புதிய சாதனை

முதன் முறையாக போர் விமானம் ஒன்றினை, விமானம் தாங்கி கப்பலில் தரையிறக்கி சீனா சாதனை படைத்துள்ளது.



சீனா தனது கடற்படையில் புதிதாக இணைத்து கொண்டுள்ள விமானம் தாங்கி போர்க் கப்பல் ஒன்றில், போர் விமானம் ஒன்றை முதல் முறையாக தரையிறக்கி உள்ளது.

இந்த தகவலை அந்நாட்டின் இராணுவ அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது ஆசிய பிராந்தியத்தில் சீனாவுக்கு உள்ள வலுவை எடுத்துக்காட்டுவது போன்று உள்ளதாக கருதப்படுகிறது.

மேலும் சீனாவுக்கும், ஜப்பானுக்கும் இடையில் அவ்வப்போது சச்சரவுகள் நிலவி வரும் நிலையில், சீனாவின் இந்த முயற்சி அமைதியின்மையை உருவாக்கக்கூடும்.

# தலைமுடிக்கு சாயம் பூசி வந்த பெண் மரணம்

தொடர்ச்சியாக தலைமுடிக்கு சாயம் பூசி வந்த பெண் மரணமடைந்தது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



பிரிட்டனின் யார்'யர் பகுதியை சேர்ந்தவர் ஜூலி மெக்கேப்(வயது 38). இவருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர்.

இவர் பல ஆண்டுகளாக தலைமுடிக்கு சாயம் பூசுவதை வழக்கமாக கொண்டிருந்தார்.

இந்நிலையில் கடந்தாண்டு அக்டோபர் மாதம் திடீரென இவருக்கு இருதய கோளாறு ஏற்பட்டு சுவாசிக்க சிரமப்பட்டார்.

இதனையடுத்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சில நாட்களிலேயே கோமா நிலைக்கு தள்ளப்பட்டார். ஓராண்டாக மருத்துவமனையில் இருந்த ஜூலி, கடந்த மாதம் இறந்து விட்டார்.

ஜூலி பயன்படுத்திய தலை சாயத்தில் உள்ள "பாரா பீனைல் எனிடியாமைன்" என்ற ரசாயனம் தான், இவரது மரணத்துக்கு காரணம் என கூறப்படுகிறது.

# ஜப்பானில் 40 கிலோ தங்கத்தினாலான கிறிஸ்மஸ் மரம் அமோக விற்பனை

ஜப்பானில் சுமார் 40 கிலோ தங்கத்தினால் செய்யப்பட்ட கிறிஸ்துமஸ் மரம் விற்பனைக் காக மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. ஜப்பானின் டவ்ண்டவுன் பகுதியில் உள்ள தனாகா கிகின் ஜோகு ஜுவல்லரி என்ற நகைக் கடை உள்ளது.

இங்கு சுத்தத் தங்கத்தாலான 40 கிலோ எடை கொண்ட கிறிஸ்துமஸ் மரம் செய்யப்பட்டு விற்பனைக்காக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

2.4 மீற்றர் உயரமும், 1.2 மீற்றர் விட்டமும் கொண்ட இந்த மரத்தில் மிக்கி மவுஸ், சின்ட்ரல்லா, டிங்கர் பெல் போன்ற 50 டிஸ்னி கதாபாத்திரங்களின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மேலும் சுற்றிலும் தங்கத்தால் செய்யப்பட்ட இலைகள் தொங்க விடப்பட்டுள்ளன.

இதன் மதிப்பு ரூ.23 கோடி (இந்திய ரூபாய்) என்று நகைக் கடையின் விற்பனை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வளவு பணம் கொடுத்து வாங்க முடியாத நபர்களுக்காக, குறைந்த விலையில் 25 செ.மீ உயரத்தில் 20 டிஸ்னி உருவங்கள் பொறிக்கப்பட்ட ரூ. 1.34 கோடி மதிப்பிலான மினி கிறிஸ்துமஸ் மரங்களையும் இந்த கடையில் வைத்துள்ளனர்.

பெரிய மரத்தை வாங்க இதுவரை யாரும் வரவில்லையாம். ஆனால் சிறிய மரத்தை வாங்க சிலர் முன்வந்துள்ளனர் என்று கடை அதிகாரி தெரிவித்துள்ளார்.

# கைதிகளின் ஆயுள் தண்டனை காலம்: உயர் நீதிமன்றம் தெளிவு



ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டால், அவர், ஆயுள் காலம் முழுவதும் சிறையில் இருக்க வேண்டும் என்பதே அர்த்தம் என, சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது. இதனால், தலைவர்கள் பிறந்த நாளில், மாநில அரசுகள், கைதிகளை விடுவிக்கும் நடைமுறைக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.ஆயுள் தண்டனை தொடர்பான வழக்கு ஒன்றை விசாரித்த, நீதிபதிகள், ராதாகிருஷ்ணன் மற்றும் மதன் பி.லோகூர் அடங்கிய, சுப்ரீம் கோர்ட், "பெஞ்ச்" பிறப்பித்த உத்தரவு: குற்ற வழக்குகளில், ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டால், 14 அல்லது 20 ஆண்டுகள் சிறைவாசத்தை முடித்ததும், அவரை விடுவிக்க வேண்டும் என்ற, தவறான கருத்து நிலவுகிறது. சிறைத் தண்டனை பெற்றவரும், அதை ஒரு உரிமையாக கருதுகிறார் அது சரியல்ல.தண்டனை பெற்ற கைதி, 14 ஆண்டுகள் சிறைவாசத்தை முடித்து விட்டதால், தன்னை விடுவிக்க வேண்டும் என, கோர முடியாது. கோர்ட்டால், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர், தன் ஆயுள் காலம் முழுவதும் சிறையில் இருக்க வேண்டும் ஆயுள் தண்டனை என்பதற்கு இதுவே அர்த்தம். சம்பந்தப்பட்ட மாநில அரசுகள், தண்டனையை குறைத்தால் மட்டுமே, அவர் வெளியில் வர முடியும்.

அதேநேரத்தில், தண் டனை குறைப்பு என்பது, 14 ஆண்டுகளுக்கு மேல், சிறைத் தண்டனை அனுபவித்தவர்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும். 14 ஆண்டுகளுக்கு குறைவாக, தண்டனை அனுபவித்தவர்களுக்கு, தண்டனை குறைப்பு வழங்க முடியாது.

சமீபத்தில், மரண தண்டனை விதிக்கப்பட்ட பல வழக்குளைப் பார்க்கும் போது, அவற்றில், நீதிபதிகளின் மனப்போக்கிற்கு ஏற்ப தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. அரிதிலும் அரிதான வழக்குகளில், மரண தண்டனை விதிக்கப்படும் போது, ஒரே விதமான நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை என்பது தெளிவாகிறது.அதனால், மரண தண்டனை விதிப்பது தொடர்பாக, 1980ம் ஆண்டில், சுப்ரீம் கோர்ட்டின் அரசியல் சட்ட, "பெஞ்ச்" அளித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை, புதிதாக ஆய்வு செய்ய வேண்டியதும் அவசியம்.இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

சுப்ரீம் கோர்ட்டின் இந்த உத்தரவால், தலைவர்களின் பிறந்த நாள் மற்றும் விழாக்காலங்களை ஒட்டி, ஆயுள் தண்டனை கைதி-களை, ஒட்டு மொத்தமாக மாநில அரசுகள், விடுவிக்கும் நடைமுறைக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. தண்டனை பெற்ற ஒவ்வொருவர் பற்றிய விபரங்களையும், தனித்தனியே பரிசீலித்து முடிவெடுக்க வேண்டிய நிலைமை உருவாகி உள்ளது.

# இந்திய செய்திகள்

## வீரபாண்டி ஆறுமுகத்தை தொடர்ந்து மாஜி அமைச்சர் செல்வராஜ் மரணம்



வீரபாண்டி ஆறுமுகத்தை தொடர்ந்து தி.மு.க. முன்னாள் அமைச்சர் சமயநல்லூர் செல்வராஜ் (வயது 66) சென்னையில் காலமானார். தி.மு.க. ஆட்சி காலத்தில் ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சராக இருந்த சமயநல்லூர் செல்வராஜ், கடந்த சில மாதங்களாக சிறுநீரகக் கோளாறால் அவதிப்பட்டு வந்தார்.

இதனால் சென்னையில் உள்ள தமது மகள் வீட்டில் தங்கி சிகிச்சை பெற்று வந்தார். அவரது உடல்நிலை மோசமானதைத் தொடர்ந்து சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் நேற்றிரவு 7 மணியளவில் சிகிச்சை பலனின்றி செல்வராஜ் காலமானார். அவரது மறைவுக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி இரங்கல் தெரிவித்துள்ளார். தி.மு.க மாஜி அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் மறைந்து சில நாட்களிலேயே சமயநல்லூர் செல்வராஜும் மறைந்திருப்பது தமக்கு பெரும் கவலையளிப்பதாக கருணாநிதி தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியா - சீனா இடையிலான பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை



சீனாவுடனான இந்தியாவின் உறவு நல்ல முறையில் உள்ளது என இராணுவ தளபதி பிக்ராம் சிங் கூறியுள்ளார். இந்தியா- சீனா இடையே கடந்த சில தினங்களுக்கு முன்பு மீண்டும் எல்லைப் பிரச்சினை கிளம்பியது.

அதாவது, சீனாவிலிருந்து இந்தியாவுக்கு வரும் சுற்றுலா பயணிகளின் கடவுச்சீட்டில் அருணாச்சல பிரதேச மாநிலமும் காஷ்மீரின் லடாக்கில் உள்ள அக்சய் சின் என்ற பகுதியும் சீன எல்லைக்குள் இருப்பது போன்ற வரைபடம் இடம் பெற்றுள்ளது.

பதிலுக்கு இந்திய குடியேற்றத் துறை அதிகாரிகள் சீனாவிலிருந்து வரும் சுற்றுலா பயணிக-ளின் கடவுச்சீட்டில் இந்த இரண்டு பகுதிகளும் இந்திய எல்லைக்குள் இருக்கும் வரைபடங்களின் முத்தரையை குத்துகின்றனர்.

இந்நிலையில் இரு நாடுகளுக்கு ஏற்படும் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் மிக உயர்ந்த போர் பகுதியான சியாச்சென் பகுதியில் இருந்து இராணுவத்தை விலக்க தேவையில்லை என பிக்ராம் சிங் தெரிவித்துள்ளார்.



கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு விழாக்கள் வருவதை முன்னிட்டு கேக் அலங்கரிக்கும் போட்டி சென்னை கோயம்பேட்டில் நடந்தது. இதில் பல்வேறு விதமாக அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பிரமாண்ட கேக்குளை ஆர்வமுடன் பார்வையிடும் பார்வையாளர்கள்.

# ரூ.1000 கோடி முதலீட்டில் ஏவுகணை தளம் அமைக்க முடிவு

ஆந்திர மாநில கடற்கரை நகரமான மசூலிப்பட்டினத்தில் ரூ. 1000 கோடி முதலீட்டில் ஏவுகணை தளம் அமைக்க பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இராணுவ ஆய்வு மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (DRDO) முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக ஐதராபாத்தில் பேட்டியளித்த Defence Research and Development Organisation தலைவரும், இராணுவ மந்திரியின் அறிவியல் ஆலோசகருமான வி.கே. சரஸ்வத் கூறியதாவது:

சண்டிபூர் கடல் பகுதி மற்றும் ஒடிசா மாநிலம் பலசோரில் உள்ள வீலர் தீவு ஆகிய இடங்களில் DRDOவின் ஏவுகணை தளங்கள் உள்ளன.

இங்கிருந்து நீண்ட தூரம் சென்று தாக்கும் திறன்கொண்ட அக்னி ரக ஏவுகணைகளும், குறைந்த தூர இலக்கை தாக்கும் பிரித்வி ரக ஏவுகணைகளும் விண்ணில் ஏவப்படுகின்றன. தற்போது, மசூலிப்பட்டினத்தில் 3-ஆவது ஏவுதளம் அமைக்க முடிவு செய்துள்ளோம்.

இந்த ஏவுளம் ரூ.1000 கோடி முதலீட்டில் அமைக்கப்படும் என்றும் இதற்காக 260 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தித் தரும்படி மாநில அரசை கேட்டுள்ளோம் என்று கூறினார்.

# மும்பை தாக்குதல் நினைவு தினம் மும்பையில் பலத்த பாதுகாப்பு



மும்பை தாக்குதலின் 4ஆம் ஆண்டு நினைவு தினம் நாளை அனுசரிக்கப்பட உள்ளதால் மாநகர் முழுவதும் பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.


கடந்த 2008ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி மும்பையில் லஷ்கர்-இ-தொய்பா தீவிரவா திகள் தொடர் தாக்குதல் நடத்தியதில் 166 பேர் கொல்லப்பட்டனர்.

அப்போது தீவிரவாதிகளுடன் பொலிஸார் நடத்திய சண்டையில் 9 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அஜ்மல் கசாப் என்ற ஒரு தீவிரவாதி மட்டும் உயிருடன் பிடிபட்டான்.

அவன் கடந்த 21ஆம் திகதி தூக்கிலிடப்பட்டான். கசாபை தூக்கிலிட்டதற்கு பதிலாக இந்தியா மீது தாக்குதல் நடத்துவோம் என்று பாகிஸ்தான் தெக்ரீக்-இ-தலிபான் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர். இந்நிலையில் இந்த தாக்குதலின் நான்காம் ஆண்டு நினைவு தினம் நாளை மும்பையில் அனுசரிக்கப்படவுள்ளது.

இதை முன்னிட்டு மும்பை விமான நிலையம், இரயில்வே நிலையம், பாபா அணு ஆராய்ச்சி மையம் மற்றும் முக்கிய இடங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மும்பையின் முக்கிய சாலைகளிலும் பொலிஸார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

# சவீதா மரணம் குறித்துப் பொது விசாரணை நடத்த அயர்லாந்து முடிவு




இந்தியாவை சேர்ந்த சவீதாவின் மரணம் குறித்து பொது விசாரணைக்கு உத்தரவிட வாய்ப்புள்ளது என்று அயர்லாந்து அரசின் மூத்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். கர்நாடக மாநி-லம் பெல்காமைச் சேர்ந்த சவீதா, தனது கணவர் பிரவீணுடன் அயர்லாந்தில் வசித்து வந்தார். கருக்கலைப்புக்காக அங்குள்ள மருத்துவமனையொன்றில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அயர்லாந்து கத்தோலிக்க நாடு என்பதால் கருக்கலைப்புக்கு மருத்துவர்கள் மறுத்தனர். இதனைத் தொடர்ந்து சவீதா மரணம-டைந்தார். இது தொடர்பாக மருத்துவ விசாரணைக்கு அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது. ஆனால் இந்த விசாரணை மீது தனக்கு நம்பிக்கையில்லை என்றும், பொது விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் எனவும் சவீதாவின் கணவர் பிரவீண் வலியுறுத்தி வருகிறார்.

இந்நிலையில் அயர்லாந்து மருத்துவ அமைச்சர் ஜேம்ஸ் ரெய்லி, பிரவீணை வெள்ளிக்கிழமை சந்தித்து ஆழ்ந்த வருத்தம் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து, சவீதா மரணம் தொடர்பாக பொது விசாரணைக்கு உத்தரவிட வாய்ப்புள்ளது என்று அயர்லாந்து அரசின் மூத்த அதிகாரி இமன் கில்மோர் கூறியதாக தகவல் வெளியாகி உள்ளது.

# இந்தியா 10 விக்கட்டுகளால் தோல்வி

## இந்திய - இங்கிலாந்து கிரிக்கட் தொடர் 1-1 என்ற சமநிலையில்



இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 10 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

இதன்படி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2 போட்டிகளின் பின்னர் இங்கிலாந்து அணி 1 - 1 என்ற கணக்கில் சமப்படுத்தியுள்ளது. மும்பையில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி செற்றேஸ்வர் புஜாராவின் 135 ஓட்டங்கள், ரவிச்சந்திரன் அஷ்வினின் 68 ஓட்டங்களின் துணையோடு 327 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக மொன்ரி பனசர் 5 விக்கெட்டுக்களையும், கிரேம் ஸ்வான் 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலளித்தாடிய இங்கிலாந்து அணி கெவின் பீற்றர்சனின் 186 ஓட்டங்கள், அலஸ்ரெயர் குக் இன் 122 ஓட்டங்களின் துணையோடு 413 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இந்திய அணி சார்பாக பிரக்ஜான் ஓஜா 5 விக்கெட்டுக்களையும், ரவிச்சந்திரன் அஷ்வின், ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை யும் கைப்பற்றியிருந்தனர்.

மீண்டும் துடுப்பெடுத் தாடிய இந்திய அணி 142 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இந்திய அணி சார்பாக கௌதம் கம்பீர் மாத்திரம் சிறப்பாக ஆடி 65 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக மொன்ரி பனசர் 6 விக்கெட்டுக்களையும், கிரேம் ஸ்வான் 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருந்தனர்.

57 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 9.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது.

நிக் கொம்ப்ரன் 30 ஓட்டங்களையும், அலஸ்ரெயர் குக் 18 ஓட்டங்களையும் பெற்றனர். இப்போட்டியின் நாயகனாக இங்கிலாந்து அணி சார்பாக சிறப்பாகத் தடுப்பெடுத்தாடிய கெவின் பீற்றர்சன் தெரிவானார்.

## அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா கிரிக்கட் தொடர் சமநிலையில்



அவுஸ்ரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், அவுஸ்ரேலிய அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ற் தொடரின் 2வது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியற்ற முடிவைத் தந்துள்ளது.

தென்னா பிரிக்க அணியின் துடுப்பாட்ட வீரர்கள் போராடி இந்த வெற்றி தோல்வியற்ற முடிவைப் பெற்றுக் கொண்டனர்.

அடிலெய்டில் இடம்பெற்ற இப்போட்டியில் அவுஸ்ரேலிய அணி மைக்கல் கிளார்க்கின் 230 ஓட்டங்கள், டேவிட் வோணர், மைக்கல் ஹசி ஆகியோரின் சதங்களின் உதவியுடன் 550 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக மோர்னி மோர்க்கல் 5 விக்கெட்டுக்களையும், ஜக்ஸ் கலிஸ், டேல் ஸ்ரெய்ன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலளித்தாடிய தென்னாபிரிக்க அணி கிரேம் ஸ்மித்தின் 122 ஓட்டங்கள், ஃபப் டு பிளெஸிஸ், ஜக்ஸ் கலிஸ், அல்விரோ பீற்றர்சன் ஆகியோரின் அரைச்சதங்களின் உதவியுடன் 388 ஓட்டங்களைப் பெற்றது.

மீண்டும் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்று தென்னாபிரிக்க அணி 430 ஓட்டங்களை இலக்காக வழங்கியது.

430 ஓட்டங் களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத் தாடிய தென்னாபிரிக்க அணி அவ்வணி இறுதியில் 8 விக்கெட்டுக்களை இழந்து 248 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஃபப் டு பிளெ ஸிஸ் 376 பந்துகளில் ஆட்டமி ழக்காமல் 110 ஓட்டங்களையும், ஜக்ஸ் கலிஸ் 46 ஓட்டங்களை யும், ஏபி.டி.வில்லியர்ஸ் 220 பந்து களில் 33 ஓட்டங்களையும் பெற்ற னர். போட்டியின் நாயகனாக ஃபப் டு பிளெஸிஸ் தெரிவானார்.

## கல்வி அமைச்சு அணி வெற்றி

ஆளுநர் வெற்றிக் கிண்ணத்திற்காக வடமாகாண அமைச்சுக்களிற்கு இடையிலான 10 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்தாட்டக் கிரிக்கெட் போட்டிகள் கல்வியங்காடு ஜி.ரி.எஸ் மைதானத்தில் நடைபெற்றது.

கடந்த வியாழக்கிழமை மாலை நடைபெற்ற போட்டியில் கல்வி அமைச்சு அணியினை எதிர்த்து சுகாதார அமைச்சு அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சுகாதார அமைச்சு அணி [illegible] ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றது.

52 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கல்வி அமைச்சு அணி 7.5 ஓவர்களில் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

## கால்பந்தாட்ட போட்டியில் ஈகிள்ஸ் கழகம் வெற்றி

திருகோணமலை கால்பந்து லீக் கழகங்களுக்கு இடையேயான லீக் முறை சுற்றுப் போட்டி ஒன்றில் ஈஸ்டன் ஈகிள்ஸ் கழகம் வெற்றிபெற்றுள்ளது.

ஏழு கழகங்கள் கொண்ட நேற்று முன்தினம் சனிக்கிழமை மெக்கெய்சர் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் புக் புட் கழகத்தை எதிர்த்து ஈஸ்டன் ஈகிள்ஸ் கழகம் விளையாடியது.

இதில் ஈஸ்டன் ஈகிள்ஸ் கழ[illegible] புட் கழகத்தை 2:1 எனற் கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

## பங்களாதேஷின் ஷகிப் அல் ஹசனுக்கு காயம்




பங்களாதேஷ் அணியின் சகல துறை வீரர் ஷகிப் அல் ஹசன் உபா தைக்குள்ளாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நடந்து முடிந்த இரண்டாவது டெஸ்ற் போட்டியில் அவருக்கு காலில் காயம் ஏற்பட் டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ற் போட்டியின் நான்காம் நாளின் போது ஷகிப் அல் ஹசனின் உபாதை தொடர்பாக ஸ்கான் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும், அதன் போது அவருக்கு உபாதை ஏற்பட்டி ருப்பது உறுதிப்படுத்தப் பட்டிருப்பதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது, இதன்படி பங்களாதேஷ், மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டி தொடரின் முதலிரண்டு போட்டி களிலும் ஷகிப் அல் ஹசன் பங்குகொள்ள மாட்டார் என அறிவிக் கப்பட்டுள்ளது. ஷகிப் அல் ஹசனுக்குப் பதிலாக மாற்றுவீரர் ஒருவர் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

## மீண்டுமொரு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்:

- மொஹமட் ஆமிர்



ஸ்பொட் ஃபிக்சிங் குற்றச்சாட்டில் 5 வருடகாலத் தடை விதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் ஆமிர், கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக தனக்கான இன்னுமொரு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் இடம் பெற்ற டெஸ்ற் போட்டியில் பணத்தை பெற்றுக் கொண்டு வேண்டுமென்றே முறையற்ற பந்துகளை வீசி ஸ்பொட் ஃபிக்சிங் சம்பவத்தில் ஈடுபட்டதாக பாகிஸ்தான் அணியின் சல்மான் பட், மொஹமட் ஆசிப் ஆகியோரோடு மொஹமட் ஆமிரும் குற்றஞ்சாட்டப்பட்டார்.

மூவரது குற்றமும் நிரூபிக்கப் பட்டதன் காரணமாக மூவருக்கும் கிரிக்கட் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான தடை விதிக்கப் பட்டிருந்தன.

இதில் மொஹமட் ஆமிருக்கு 5 வருடங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள மொஹமட் ஆமிர், சூதாட்டக்காரர்களோடு தொடர்புகளை வைத்திருந்த மார்லன் சாமுவேல்ஸ் தனக்கான தடைக்குப் பின்னர் போட்டிகளில் பங்குபற்ற முடியும் என்றால் தன்னாலும் மீண்டும் ஏன் பங்குபற்ற முடியாது எனக் கேள்வியெழுப்பினார்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 27.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது